# TAMIL LITERATURE.

# தமிழ்க்கவி சரிதம்.

BY

M. SESHAGIRI SASTRI, M.A.,

*Late Professor of Sanskrit and Comparative Philology, Presidency College, Curator, Government Oriental Manuscripts Library, Madras.*

**Madras:**

INTED BY SRINIVASA, VARADACHARI & CO.

1904.

[*All rights reserved.*]

[**Postage Extra.**

# தமிழ்க்கவி சரிதம்

ஆதியில் நந்தமிழ்மொழிக்கண் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்றுசங்கங்களிருந்தனவென்று பொதுப்பட யாவரும் நம்புகின்றனர். இச்சங்கங்களென்னுந் தமிழ்ப்புலவர்குழாங்களைப் பற்றிக் கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மருளொருவரும் மதுரைக்கணக்காயனார் மகனாருமாகிய நக்கீரர் தாங் கண்டருளிய இறையனாரகப்பொருளுரையின்கட் கூறுவதே மிகப்பழமையான சரிதம். அதன்பின் இறையனாரகப்பொருளுரையின்கணுள்ளதையே நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பொருளதிகாரவுரையின்கண்ணே மீட்டு மெடுத்துரைத்தனர். அதனையே அடியார்க்கு நல்லாரும் சிலப்பதிகார வுரையின்கண்ணே* வரைந்துகொண்டனர். இனி மூன்றாவதாக, பிரமஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் தாம் பதிப்பித்த சிலப்பதிகார வுரையின்கண்ணே இச்சங்கங்களைப்பற்றிக் கூறுகின்றனர்.

பின்வரும் பகுதி இறையனாரகப்பொருளுரையில் நக்கீரர் கூறுவது :—

"தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்றுசங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள், தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும், குன்றமெறிந்த முருகவேளும், முரிஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின்கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்பது. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்பது. அவர்களாற் பாடப்

பட்டன *வேத்துணையோர் பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையும் என இத்தொடக்கத்தன; அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தாரென்பது; அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மரென்ப; அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரையென்ப; அவர்க்கு நூல் அகத்தியமென்ப.

இனி இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க்காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன்மாறனும், துவரைக்கோமானும், கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மரென்ப.

அவருள்ளிட்டு மூவாயிரத் தெழுநூற்றுவர் பாடினாரென்ப; அவர்களாற் பாடப்பட்டன கலியுங் குருகும் வெண்டாளியும் வியாழமாலையகவலும் என இத்தொடக்கத்தனவென்ப; அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமுமென இவை; அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப; அவரைச் சங்கமிரீஇயி

*சிலப்பதிகாரவுரை 197-ஆம் பக்கத்தில் 'வேத்துணையோர் பரிபாடல்' என்றவிடத்து 'எண்ணிறந்த பரிபாடல்' என்றுளது. ஆண்டு 'எண்ணிறந்த' என்பது 'அளவற்ற' எனப்பொருள்படும். அன்றியும் அவ்வுரை 2-ஆம் பக்கத்திற் சாமிநாதையரவர்களா லெடுத்துக்காட்டப்பட்ட பகுதியில் 'பெரும்பரிபாடல்' என்றுளது. ஈண்டுக்கூறிய 'பெரும்' என்னும் அடைமொழியும், முன்னர்க்கூறிய 'எண்ணிறந்த' என்னும் அடைமொழியும் பொருட்பொருத்தமுறுமாறு காண்க. 'எண்ணிறந்த,' 'பெரும்' என்னும் இவ்விடைமொழிகளும் 'வேத்துணையோர்' என்பதனை 'வைத்துணையோ' எனப்படித்தலியலுமென்றும், அது வகர வுடம்படு மெய்யும் ரகரவெழுத்துப்பிழையும் நீங்கவே 'எத்துணையோ' என நிற்குமென்றும், தம்மொடு பொருட்பொருத்தமுறுகின்றதென்றும் சுட்டுகின்றன. பனையோலை யேட்டுப்பிரதிகளிற் பெரும்பாலும் எகர ஏகாரங்களுக்கும் ஒகர ஓகாரங்களுக்கும் வேற்றுமையின்மையின் 'வேத்துணையோ' என்பது 'வெத்துணையோ' எனச்சந்திசேர்த்தெழுதப்பட்டிருக்கவேண்டுமென்றெண்ணுகின்றோம்.

ஞர் * வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறனீறுக ஐம்பத்தொன்பதின்மரென்ப; அவருட் கவியாங்கேறினார் ஐவர் பாண்டியரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்பது. அக்காலத்துப் போலும் பாண்டியநாட்டைக் கடல்கொண்டது.

இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங்குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும், மருதனிளநாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனு மென்ற இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப; அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகைநானூறும் குறுந்தொகைநானூறும் நற்றிணைநானூறும் ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தும் நூற்றைம்பதுகலியும் எழுபதுபரிபாடலும் கூத்தும் வரியும் பேரிசையும் சிற்றிசையுமென்று இத்தொடக்கத்தன; அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமுமென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றி யாண்டென்ப; அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப்போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்ம ரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தரமதுரை யென்ப; அவருட் கவியாங்கேறினார் மூவர் பாண்டியரென்ப."

பின்வருங் கடைச்சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மர்பெயரும், திருக்குறளின் சிறப்புப்பாயிரமாகிய

* இறையனாரகப்பொருள் அச்சுப்பிரதியில் இப்பெயர் 'வெண்டேச்செழியன்' என்றெழுதப்பட்டுளது. அதன்கட்பிற்பகுதியாகிய 'செழியன்' என்பது பாண்டியனெனப் பொருள்படுமாயினும் முற்பகுதியாகிய 'வெண்டே' என்பது பொருள்படாது நிற்றலின், அதனை யாம் 'வெண்டேர்ச்செழியன்' என்பதன் திரிபெனக்கொண்டனம்; யாங்கொண்டதே ஸ்ரீ சாமிநாதையரவர்களுக்கும் உடன்பாடென்பது அவர் தாம் அச்சிட்ட சிலப்பதிகாரவுரையினால் தெற்றென விளங்குமாறுணர்க.

திருவள்ளுவமாலையினின்றும் எடுத்தெழுதப்பட்டன

1. இறையனார்.
2. கபிலர்.
3. பரணர்.
4. நக்கீரர்.
5. மாமூலனார்.
6. கல்லாடர்.
7. சீத்தலைச்சாத்தனார்.
8. மருத்துவன் தாமோதரனார்.
9. நாகன்தேவனார்.
10. அரிசிற்கிழார்.
11. பொன்முடியார்.
12. கோதமனார்.
13. நத்தத்தனார்.
14. முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.
15. ஆசிரியர் நல்லந்துவனார்.
16. கீரந்தையார்.
17. சிறுமேதாவியார்.
18. நல்கூர் வேள்வியார்.
19. கொடிஞ்ஞாலை விழுத்தண்டினார்.
20. வெள்ளிவீதியார்.
21. மாங்குடிமருதனார்.
22. எறிச்சலூர் மலாடனார்.
23. போக்கியார்.
24. மோசிகீரனார்.
25. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்
26. மதுரைத் தமிழ் நாயகனார்.
27. பாரதம்பாடிய பெருந்தேவனார்.
28. உருத்திரசன்மகண்ணர்.
29. பெருஞ்சித்தனார்.
30. நரிவெரூஉத் தலையார்.
31. மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க்கிழார்.
32. மதுரையறுவை வாணிகர் இளவேட்டனார்.
33. கவிசாகரப் பெருந்தேவனார்
34. மதுரைப் பெருமருதனார்.
35. கோவூர்க்கிழார்.
36. உறையூர் முதுகூற்றனார்.
37. இழிகட் பெருங்கண்ணனார்.
38. செயிர்க்காவிரியார்மகனார் சாத்தனார்.
39. செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்.
40. வண்ணக்கஞ்சாத்தனார்.
41. களத்தூர்க்கிழார்.
42. நச்சுமனார்.
43. அக்காரக்கனி நச்சுமனார்.
44. நப்பாலத்தனார்.
45. தேனீக்குடிக்கீரனார்.
46. கொடிஞாழன் மாணிபூதனார்.
47. கவுணியனார்
48. மதுரைப்பாலாசிரியனார்.
49. ஆலங்குடிவங்கனார்.

முதலிரண்டு சங்கங்களையும்பற்றி யாம் ஆராயப்புகின் அவை எறக்குறையப் பொய்யுரையும் புனைந்துரையும் பொதிந்துளவாதலிற் சிறிதேனும் நம்புதற்பாலனவல்ல. உலகத்திலுள்ள பல்வேறு தேயங்களின் சரித்திரங்களை யுங் கற்றுணர்ந்த பண்டிதனெவனும் இத்தகைய பொய்க் கதைகளை மெய்ச்சரிதங்களோடு உடனெண்ணத் துணி யான்.

ஆயினும் மேற்போந்த கதைகளில் மதுரையிற் பாண் டியராசர்களது அரசாட்சியைப்பற்றிக் கொஞ்சம் உண் மையிருக்கலாம் ; எனினும், முதற்சங்கத்தோடுசேர்ந்த 89 - பாண்டியர்களும் இடைச்சங்கத்தோடுசேர்ந்த 59- பாண்டியர்களும் ஆகிய இத்துணைப்பாண்டியர்கள் அவ் விராச்சியத்தை ஆண்டுவந்தனரென்பது நம்புதற்கரிய விடயமாயிருக்கின்றது. அதனை யுண்மையெனக் கோ டற்கு இன்னும் வேறு ஆதாரங்கள் வேண்டும். ஈண்டுக் கூறிய இத்தொகையினை ஆலாசியமான்மியமாகிய திரு விளையாடற்புராணத்திற் கூறப்பட்ட பாண்டியர்தொகை யோடு ஒப்பிடல்வேண்டும். அப்புராணத்தின்படி குல சேகரபாண்டியன் முதலரையனும் கூன்பாண்டியன் மக ன் மதுரேசுரபாண்டியன் கடையரையனுமாகின்றனர். மேலும் அப்புராணத்தின்கட்கூறிய இராசவமிசாவளி யில் மேற்கூறிய ஈராசர்களையுங் கூட்டி 72 பெயர்கள் மட்டுமே காணப்படுகின்றனர். குலசேகரபாண்டியனி னின்றும் 46 - வது அரசனாகிய வமிசசேகரபாண்டியன் காலந்தொடங்கிக் கடைச்சங்கம் நடந்துவருதலின், முதல் 45 - பாண்டியர்களும் முதலிடைச் சங்ககாலங்களில் இருந்தவர்களென்பது போதரும். ஆனால் இறையனா ரகப்பொருளுரையின்வண்ணம், முதற்சங்கத்து 89 - பா ண்டியர்களும் இடைச்சங்கத்து 59- பாண்டியர்களுமாக 148 - பாண்டியர்களிருந்தனரென்பது முற்கூற்றோடு முரணுமாறு உற்றுணர்க. மேற்கூறியவற்றினாலேற்படுங் காலக்கணக்கினைக் கைக்கொண்டு கருதப்புகின்

ண்டியர்களும் ஒருங்குகூடி 9990 - ஆண்டுகளிருந்தனவென்று கொள்ளக் கிடக்கின்றது. அப்போது ஒவ்வோராசனும் சராசரி 50- ஆண்டுகள் சீவித்திருந்தனனென்று ஏற்படும். இன்னணம் மன்னர்களுள் ஒவ்வொருவரும் 50 வருஷகாலம் அரசு செலுத்தி வந்தனரென்று உலகின்கண் எந்நாட்டினதேனும் பழஞ்சரிதத்திலாதல் புதுச்சரிதத்திலாதல் கண்டுமறியேம், கேட்டுமறியேம்.

| | ஆண்டுகள். |
|---|---|
| 89 - பாண்டியர்கள் : காய்சின வழுதி முதலாகக் கடுங்கோனீறாக முதற்சங்கமிரீஇயினார் | 4440 |
| 59 - பாண்டியர்கள் : வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறனீறாக இடைச்சங்கமிரீஇயினார் | 3700 |
| 49 - பாண்டியர்கள் : முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி யீறாகக் கடைச்சங்கமிரீஇயினார் | 1850 |
| 197 - பாண்டியர்கள் முச்சங்கமுமிரீஇயினார் | 9990 |

தமிழ்க்கவி சரிதத்திற்கு வேண்டிய ஆராய்ச்சிகள் கருவுற்ற காலத்தேயே அல்லது குழவியாம்பருவத்தேயே பொய்யுரைபுனைந்துரைகளினின்றும் மெய்ம்மையை வேறுபடுத்தலியலாது ; ஆகவே, இனிமேற் செய்யப்படும் ஆராய்ச்சிகளாற் போதரும் பயன்களை யாம் எதிர்பார்த்துக்கொண்டிருத்தல் வேண்டும். என்றாலும், யாம் இப்புத்தகத் திறுதியில், யாவரும் சுலபமாக ஒப்புநோக்குதற்கும் அடிக்கடி உபயோகித்தற்கும் ஏற்றவண்ணம் ஆலாசியமான்மியத்திற் கூறியாங்கே பாண்டிய ராசர்களது வமிசாவளியை அச்சிட்டிருக்கின்றாம்.

ஆலாசியமான்மியத்தின்படி மேற்கூறிய 49 - புலவர்களும் வடமொழி நெடுங்கணக்கின்கணுள்ள 49-எழுத்துக்களின் அவதாரங்களாயினர்; அவற்றுள், முதல்

எழுத்துக்களும் நாமகளைக் குறித்து நின்றன ; இறுதியி லுள்ள ஹகாரம் மட்டும் கர்த்தன் சிவபிரானைக் குறித்து நின்றது. அவர்கள் கங்காநதிக் கரையிற் பிறந்து வமிச சேகரபாண்டியன் அரசாளுங்காலை மதுரைக்குப் போந்து கடைச்சங்கங் கூடினர். ஆயினும் அவர்களுட் சிலர்மட்டுமே பெயர்கூறப்பட்டு ஆலாசியமான்மியத்தில் ஆங்காங்குப் பற்பலவிடங்களிற் குறிப்பிக்கப்பட்டுளர். குலசேகர பாண்டியனினின்றும் 59 - ஆவது சந்ததியாகிய பூப சூடாமணி பாண்டியன் ஆளுகையில் ஒரு பிரளயம் நிகழ்ந்தது. அதன்கண் சங்கமுழுதும் பாண்டிய ராச்சியமும் அழிந்துவிட்டன. பல்லாண்டுகள் சென்ற பின்னர்ச் சங்கப்புலவரனைவரும் பாண்டிய குலேச பாண்டியன் காலத்து மீட்டும் அவதரித்தனர். இவ்வமயத்திலே கபிலரது நண்பருளொருவராய இடைக்காடர் வரவு கூறப்பட்டுளது. ஆகவே, ஆலாசியமான்மியத்தின்படி வமிசசேகரபாண்டியன் அரசாட்சியிற் றோன்றிய புலவர் நாற்பத்தொன்பதின்மராலாய கடைச்சங்கம் பாண்டியகுலேசன் காலமும் அவன் மகன் அரிமர்த்தன பாண்டியன்காலமு முடியுங்காறும் நடந்துவந்ததென்று காண்கின்றோம். இவ்வரிமர்த்தன பாண்டியன் காலத்தேயே **மணிவாசகப்பெருமான்** வரவு கூறப்பட்டுளது. வமிச சேகரபாண்டியன் முதல் அரிமர்த்தன பாண்டியன் வரையும் 16-அரசர்க ளுளர். அவர்களு ளொவ்வொருவருக்கும் சராசரி 20-வருடஆட்சி கொடுத்துக் கணக்கிடுவே மேல் பிரளயத்தின் பின் சென்ற பல்லாண்டுகள் நீங்கலாக 320-வருடங்கள் போதரும். அரிமர்த்தன பாண்டியன் காலம் வரையும் ஒரேகாலத்தில் வசித்த 49 - புலவர்களு ளொவ்வொருவரும் 320 - வருடங்கள் சீவித்திருத்தல் வேண்டும். அதன்மேலும் அச்சங்கம் உக்கிரப்பெருவழுதி காலமட்டும் நடந்துசென்று அவன் காலத்திலேயே இறுதியுற்ற தென்று இறையனாகப்பொருளுரையிலேயே கூறப்பட்டுளது. சிற்சில கர்ணபரம்

பரையிற் கேள்வியுறுவதும், சில உண்ணாட்டுச் சாதனங்கள் குறிப்பதும், பல தமிழ்ப்பண்டிதர்களது அபிப்பிராயமும், திருவள்ளுவர்குறள் சங்கப்புலவர்களது உடன்பாடு பெறுமாறு அரங்கேற்றப்பட்டுழியே அச்சங்கமழிந்ததென்பது.

இந்த 49 சிறந்தபாவலர்களும் மற்றைய 449-சாமானியப் பாவலர்களும் பல பல செய்யுட்கள் செய்தனரென்று யாவரும் சொல்லுகின்றனர். அவையாவும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் முப்பகுதியு ளடங்கும். எட்டுத்தொகை யென்பது, பற்பல புலவர்களால் யாக்கப்பட்டுச் சிதறுண்டுகிடந்த செய்யுட்டொகுதிகளாம். பத்துப்பாட்டு என்பது, எழு வெவ்வேறு ஆசிரியர் செய்த பத்துப்பாடல்களின் கூட்டமாம். இதற்கு நச்சினார்க்கினியர் உரைசெய்துளர். பதினெட்டு நூல்களின் குழூஉவே, பதினெண் கீழ்க்கணக்காம். இவையனைத்தும் பொதுப்படச் சங்கச் செய்யுளெனப்படும். சங்கப் புலவர்கள் செய்த செய்யுட்களின் பெயரைப் பின்வரும் மூன்றுபாடல்களா லுணர்க :—

## எட்டுத்தொகை.

I. நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் பேசுங் கலியோ டகப்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை.

1. நற்றிணை : நானூறு பாடல்கள் கொண்டது. இது பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி தொகுத்தது.
2. குறுந்தொகை : நானூறு பாடல்கள் கொண்டது. இவை இருநூற்றைந்து புலவர்க ளியற்றியன. இத்தொகை தொகுப்பித்தான் பூரிக்கோ.
3. ஐங்குறுநூறு ; வெவ்வேறாசிரியர்கள் செய்த பாடல்களாற் றொக்கது.

4. பதிற்றுப்பத்து : பல்வேறு புலவர்கள் செய்த பாடல்களாற் றொக்கது.
5. பரிபாடல் : பல புலவர்கள் பாடியன.
6. கலித்தொகை : நல்லந்துவனார் கோத்தது.
7. அகநானூறு : நானூறு பாடல்கள் கொண்டது. உக்கிரப்பெருவழுதி காலத்தில் உருத்திரசன்மனாற் கோக்கப்பட்டது.
8. புறநானூறு : நானூறு பாடல்கள் கொண்டது. பல்லாசிரியர்கள் பாடித்தொகுத்தது.

## பத்துப்பாட்டு.

II. முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கூர்குறிஞ்சி பட்டினப்
பாலை படுகடாம் பத்து.

1. திருமுருகாற்றுப்படை : நக்கீர ரியற்றியது.
2. பொருநராற்றுப்படை : கடியலூர் உருத்திரங்கண்ணனா ரியற்றியது.
3. சிறுபாணாற்றுப்படை : நல்லூர்நத்தத்தனா ரியற்றியது.
4. பெரும்பாணாற்றுப்படை : கடியலூர் உருத்திரங்கண்ணனா ரியற்றியது.
5. முல்லைப்பாட்டு : காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகர் நப்பூதனா ரியற்றியது.
6. மதுரைக்காஞ்சி : மாங்குடிமருதனா ரியற்றியது.
7. நெடுநல்வாடை : நக்கீர ரியற்றியது.
8. குறிஞ்சிப்பாட்டு : கபில ரியற்றியது.
9. பட்டினப்பாலை : கடியலூர் உருத்திரங்கண்ணனா ரியற்றியது.
10. மலைபடுகடாம் : இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனா ரியற்றியது.

இது கூத்தராற்றுப்படை யெனவும் பெயர் பெறும்.

## பதினெண் கீழ்க்கணக்கு.

III. நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூல
மின்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

1. நாலடி : நீதிநூல். பல்லாசிரியர்கள் செய்தது. இதனைப் பால் இயல் அதிகாரமாகப் பகுத்தவர் பதுமனென்ப.
2. நான்மணி : நீதிநூல். விளம்பிநாகனா ரியற்றியது. விளம்பிநாகனா ரென்றுங் கூறுப.
3. கார்நாற்பது : மதுரைக்கண்ணங்கூத்தனா ரியற்றியது.
4. களவழி நாற்பது : சோழராசன் கோச்செங்கணானுக்கும் ஒரு சேரராசனுக்கும் நிகழ்ந்த போரினைப் பற்றிய நூல். பொய்கையா ரியற்றியது.
5. இனியவைநாற்பது : நீதிநூல்; பூதஞ்சேந்தனா ரியற்றியது.
6. இன்னாநாற்பது நீதிநூல்; கபிலதேவ ரியற்றியது.
7. திணைமொழியைம்பது : கண்ணஞ்சேந்தனா ரியற்றியது.
8. திணைமாலை நூற்றைம்பது: கணிமேதாவியா ரியற்றியது.
9. ஐந்திணையெழுபது : மூவாதிய ரியற்றியது.
10. ஐந்திணை யைம்பது: மாறன்பொறையனா ரியற்றியது.
11. திணைமாலை யைம்பது : கண்ணஞ்சேந்தனா ரியற்றியது.
12. குறள் : திருவள்ளுவ ரியற்றியது.
13. திரிகடுகம் : நீதிநூல்; நல்லாதனா ரியற்றியது.
14. ஆசாரக்கோவை : ஒழுக்கநூல்; பெருவாயின் முள்ளியாசிரிய ரியற்றியது.
15. பழமொழி: நீதிநூல்; முன்றுறையரையனா ரியற்றியது.
16. * மாமூலம் : மாமூலனா ரியற்றியது.
17. முதுமொழிக்காஞ்சி : நீதிநூல்; புரிசைகிழவோனியற்றியது.
18. ஏலாதி : நீதிநூல்; கணிமேதாவியா ரியற்றியது.

* இது சிறுபஞ்சமூலம் எனவும் பெயர்பெறும்.

அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை நாலூறு இவை போல்வன, சேர சோழ பாண்டியர் முதலாயினோரையும் அவர்தம் வீரச்செயல்களையும் நல்லொழுக்கங்களையுங் குணாதிசயங்களையும் பற்றிப் புகழ்ந்துரைத்துப் பரிசில்பெற்ற பாவாணர்களாற் பாடப்பெற்ற பாடல்களையே பெரிது முடையனவாம். உதாரணமாக, புறநானூற்றின்கண் 91 ஆம் பாடல், தமக்குக்கிடைத்தற்கரிய ஓர் அருநெல்லிக்கனி கொணர்ந்து பரிசு கொடுத்த அதியமா னெடுமானஞ்சியைப் புகழ்ந்து ஔவையார் பாடியது. அதன்கண்ணே 95-ஆம் பாடல் தொண்டைமானரசனை முன்னிலைப்படுத்திக் கூறியது. அவனிடத்து மேற்கூறிய அதியமானெடுமானஞ்சியால் ஔவையார் தூதனுப்பப்பட்டுச்சென்று ஆண்டு அவனால் அவனுடைய படைச்சாலை முழுதுங் காட்டப்பெற்றனர். இதுபோலவே பத்துப்பாட்டினு ளொன்றாகிய பெரும்பாணாற்றுப் படையுந் தொண்டைமானிளந்திரையனைப் புகழ்ந்து கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது. இப்புலவர்பெருமானே கரிகாற் பெருவளத்தானென்பான் பெருமையை வியந்து பட்டினப்பாலை பாடினர்.

மேற்கூறிய விஷயங்களுட் சில முக்கியமான வினாக்களைக்குறித்து ஆலோசித்தல் வேண்டும். அவற்றுள் முதலாவது 'கடைச்சங்கம் அழிந்தது திருவள்ளுவரது திருக்குறள் அச்சங்கத்தின்கண் அரங்கேற்றப்பட்ட பின்னரேயோ?' என்பது.

இக்கேள்வி சம்பந்தமாக, மேற்கூறிய சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரு ளொவ்வொருவரும் இருந்ததாகச் சொல்லப்படும் ஐஞ்ஞூறு வருடங்கட்கு மேற்பட்ட நீண்ட காலவளவினையும், அவர்களனைவரும் ஏககாலத்தில் வாழ்ந்திருந்தன ரென்பதனையும் ஒரு சரித்திரக்காரனும் ஒத்துக்கொள்ளான். திருக்குறளின்சிறப்பினை வியந்து கடைச்சங்கப் புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரு ளொவ்வொருவரும் ஒவ்வொருபாடல் சொற்றன ரென்

றும், அந்நூலினது இணையிலாச் சிறப்புப்பற்றியே அதனாசிரியராகிய திருவள்ளுவர் சங்கப்பலகையில் வீற்றிருக்க விடைபெற்றனரென்றும், அவர் பறையர் அல்லது தாழ்ந்த சாதியாராயினமையானே அவர் வீற்றிருத்தலும் அந்தப் பரிசுத்த புண்ணியாசநமாகிய சங்கப்பலகை தோஷமெய்திச் சீண்டப்படாததாயிற்று என்றும், அதனானேயே அச்சங்கம் முழுதும் அழிந்தது என்றும் பொதுப்படப் பெரும்பாலோர் நம்புகின்றனர். இனி யாம் இக்கதை முழுப்பொய் என்றும், திரிபு உணர்ச்சியும் விபரீதவறிவும் உற்ற சிலதமிழ்ப்பண்டிதர்கள் புனைந்தபுனைவேயன்றி வேறன்று என்றும் காட்டப்புகுவாம். இதனைத் தமிழ்ப்பண்டிதர்கள் மட்டுஞ் சொல்லவில்லை; சென்னையிலுள்ள துரைத்தனத்தார் ஏற்படுத்திய கீழைத்தேயக் கையெழுத்துப் புத்தகசாலையிற் காணப்படும் ஒருணூட்டுக் குறிப்பு முறியினாலும் அக்கூற்று வலியுறுகின்றது.

தமிழில் 'வள்ளுவன்' என்னுஞ் சொல்லிற்கு 'கற்றுணர்ந்தவன்' என்பது தாதுப்பொருள். அஃது அப்புலவர்க்கு அவரது மிகுந்த கல்வியினிமித்தம் மரியாதைச் சின்னமாக இடப்பட்டது. * பிங்கலந்தைநிகண்டில் இச்சொல் அரண்மனைக்கிரியாவிசேட மேற்பார்வையுத்தியோகஸ்தன் என்னும் பொருளிற் போந்துளது. என்னை

"வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னர்க்
குள்படு கருமத் தலைவற் கொன்றும்"

கம்பராமாயணத்தில் அரண்மனையைச் சேர்ந்த காரியங்களைச் சனங்கட்கு அறிவுறுத்துஞ் சேவகன் என்னும் பொருளில் அச்சொல் உபயோகிக்கப்பட்டுளது. என்னை?

தற்காலத்தில் காணப்படும் அகராதி நிகண்டுகள் யாவற்றினும் இதுவே மிகப் பழமையானது. ஆயினும் இது இந்நூலாசிரியரது தந்தையாராகிய திவாகர ரென்பவராற் செய்யப்பட்ட திவாகரத்திற்குப் பிந்தியதே.

" என்புழி வள்ளுவ ரியானை மீமிசை
நன்பறை யறைந்தனர் நகர மாந்தரும்
மின்பிறழ் நுசுப்பினர் தாமும் விம்மலால்
இன்பமென் றனைக்கரு மளக்க ரெய்தினர்."

இப்பொருள் இச்சொல்லின் பொருட்டிரிபின் மூன்றாம் படியினைக் குறிக்குமாறு காண்க. கி. பி. பதினைந்தாவது நூற்றாண்டில் இயற்றப்பட்ட சூடாமணிநிகண்டில் இச்சொல் 'நிமித்திகன்' என்பதன் பரியாய பதமாகக் கூறப்பட்டுளது. என்னை?

" வருநிமித்திகன்பேர் சாக்கை வள்ளுவனென்று மாகும்."

இப்பொருள் இச்சொல்லின் பொருட்டிரிபின் நான்காம்படியினைக் குறிக்குமாறு காண்க. இப்பொருளிலேயே இச்சொல் இப்பொழுதும் உலகவழக்குத் தமிழில் உபயோகிக்கப்படுகின்றது. இது பறையர்கட்குள் ஐயமேற்றுண்பானும் சோதிடமும் வரிகடமும் வல்லோனெனப்படுவானுமாகிய ஒருவனையே பெரிதுங் குறிப்பதாகக் கூறுவர் பலரும். இவ்விடயங்கள் யாவற்றையும் பற்றிக் கருதப்புகின் திருவள்ளுவர் பறையரல்லர் என்றே துணிதல் ஒருதலை. இனித் திருக்குறளிற் கூறப்படும் விஷயங்களைக் குறித்து ஆலோசிக்குமிடத்து அதனாசிரியர் சைனர் அல்லது பௌத்தராகவே யிருக்க வேண்டுமென நம்புதற்குத் தக்க காரணங்க ளுள. அநேகமாய் அவர் சைனர் என்பதே நேரிதாம். என்னெனின்:— அவர் இந்துக்களது கடவுளருள் எவரையேனும் பற்றி வாழ்த்துக் கூறாமையானும், அவர்தம் நூலின் தொடக்கத்திற் காணப்படுங் கடவுள்வாழ்த்தெல்லாம் 'மலர்மிசை யேகினான்' என்றும், 'எண்குணத்தான்' என்றும் சைனர்தங் கடவுளாய சினனைக் கூறுவதனானுமா மென்க. அதான்றியும், சைனர்கள் அந்நூலினை மிக்க பயபக்தியோடு சிரமேற்கொண்டு மதிக்கின்றனர்; மேலும் அவர்கள் தங்கள் சமய குரவர்களுள் ஒருவராகிய ஏலா

சாரிய ரென்பவர் இதனை யியற்றினாரெனவுங் கூறுகின்றனர். ஒருவேளை தமிழ்மொழியிற் பிற்றை ஞான்று 'வள்ளுவர்' என்னும் பதம் சில பறையர் குருக்களை யாதல் கல்வி கற்றுச் சமயச் சார்வாக ஒழுகும் யாசகரையாதல் குறிப்பதுணர்ந்த சிலதமிழ்ப்பண்டிதர்கட்குக் குறள் அரங்கேற்று மாயினபின்னர்க் கடைச்சங்கம் அழிந்த தென்பதும், அப்புலவர்குழாத்தினுள் அதனாசிரியரும் ஒருவரெனக் கொள்ளப்பட்டா ரென்பதும் மனத்தின்கண் உதித்திருக்கலாம். இச்சொற்பொருளில் இதுபோன்ற மாறுபாடொன்று மலையாளபாஷையினும் நிகழ்ந்திருத்தல் காண்கின்றாம்; அதன்கண் 'வள்ளுவநாடு' முதலிய சொற்களுண்மை எமது கொள்கையினையே வலியுறுத்துமாறு காண்க. "அவ்வள்ளுவநாடு சேரராஜன் பரிசையைப் பரிசுபெற்ற வள்ளுவக்கோயில்பாடென்னும் அர்ஞேத்தூர் வமிசத்தைச் சேர்ந்த வள்ளுவக்கோனாத்திரி யென்பவனால் ஆதியில் அரசாளப்பட்ட ஒரு ஜில்லாவாம்" என்று * குண்டர்ட்டு துரையுங் கூறுமாறு காண்க. ஒருவேளை ஜைனர்கட்குள் கற்றுணர்ந்தவனை வள்ளுவனென்றழைத்தல் மரபாயிருக்கலாம்; அவர்கள் ஏலாசாரிய ரென்னும் பெயரினால் தாமுணர்ந்த திருக்குறளினாசிரியர்க்கு இப்பட்டத்தினைக் கொடுத்துமிருக்கலாம். † வில்ஸன்துரை யெழுதிய ஒரு கதையில் திருவள்ளுவர் திரிபுராந்தக கவீசுவரர் என்னும் பெயருடையவ ரென்றும், சிவபெருமானே கடைச்சங்கப் புலவர் மற்ற நாற்பத்தெண்மருடைய கருத்தையு மடக்குவான் ஒரு தமிழ்ப்பாவலராக மேற்கூறிய திருநாமத்தோடுந் திருவவதாரஞ் செய்தன ரென்றும் கூறப்பட்டுளது. இப்பெயர்க்காரண மெதுவே யாயினு மாகுக; 'வள்ளுவன்' என்னும் பெயர் இடுகுறிச் சிறப்புப்பெயரன் றென்பது மட்டும் நிச்சயம்.

இனித் திருவள்ளுவரை உட்கொண்டதனிமித்தம் கடைச்சங்கம் அழிவுற்றது என்பதைப்பற்றி ஆராயுமிடத்து அக்கூற்றுப் பின்வரும் விடயங்களினலே உண்மையன்றெனத் தெள்ளிதிற் றுணியப்படும்.

கடைச்சங்கப் புலவருளொருவராகிய நக்கீரரால் இறையனாரகப் பொருளுரையின் கண்ணே ஆங்காங்குப் பற்பல விடங்களிலுந் திருக்குறளினின்றும் மேற்கோள்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன; ஆதலின், நக்கீரருரையினும் திருக்குறள் முற்பட்டதென்பது திண்ணம்.

பின்வருங் கல்லாடப்பகுதியில் திருவள்ளுவர் திருக்குறளியற்றியமையினையும், அதனை இறையனார் வியந்து கூறிய சிறப்புக்கவியினையும்பற்றிக் கூறப்பட்டுளது:—

" சமயக் கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்
மாதுடன் றோன்றிக் கூடலு ணிறைந்தோன்
றன்னைநின் றுணர்ந்து தாமுமொன் றின்றி
யடங்கினர் போலு நீயு
மொடுங்கிநின் றவையி னிந்நிலை யறிந்தே."

மேற்கூறியவற்றினின்றும் கல்லாடமும், இறையனாரகப் பொருளுக்கு நக்கீரர் உரையும், திருக்குறளிற்குப் பிற்பட்டன வென்பது தெளிவாகின்றது.

தாழ வருவனவற்றினலே நக்கீரருரை கடைச்சங்கத்தில் அரங்கேற்றப்பட்டதென்றும், அஃது அவர்களாலே ஒப்புக்கொள்ளப்பட்டதென்றும் அறிகின்றாம் :—

* " அக்காலத்துப் பாண்டியநாடு பன்னீரியாண்டு வற்கடஞ்சென்றது; செல்லவே, பசி கடுகுதலும் அரசன் சிட்டரை யெல்லாங் கூய், 'வம்மின், யான் நுங்களைப் புறந்தரகில்லேன், என் றேயம் பெரிதும் வருந்துகின்

* இறையனாரகப்பொருளுரை.

றது ; ஆகலின், நீயிர் நுமக்கறிந்தவாறு புக்கு நாடு நாடாயின ஞான்று என்னையுள்ளி வம்மின்' என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்தபின்னர் நாடுமலிய மழை பெய்தது. பெய்தபின், அரசன் இனி நாடுநாடாயிற்றாகலின் நூல்வல்லாரைக் கொணர்க வென்று எல்லாப் பக்கமும் போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக்கொணர்ந்து பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென வந்தார். வர, அரசனும், 'என்னை? எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்' எனச் சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயின் அழனிறக்கடவுள் சிந்திப்பான் : 'என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடைய தாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம்' என்று இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின்கீழிட்டான்.

இட்ட பிற்றைஞான்று, தேவர் குலம் வழிபடுவான் தேவர் கோட்டத்தை யெங்குந் துடைத்து நீர் தெளித்துப் பூவிட்டுப் பீடத்தின்கீழ் என்றும் அலகிடான் அன்று தெய்வத் தவக்குறிப்பினான் அலகிடுவானென்று உள்ளங் குளிர அலகிட்டான். இட்டாற்கு அலகினோடும் இதழ் போந்தன. போதரக் கொண்டுபோந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப் பிராமணன் சிந்திப்பான் : அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றானென்பது கேட்டுச் செல்லாநின்ற துணர்ந்து நம்பெருமானருளிச் செய்ததாகும் என்று, தன்னகம் புகுதாதே கோயிற் றலைக்கடை சென்று நின்று கடைகாப்பார்க்கு உணர்த்த, கடைகாப்பார் அரசற்கு உணர்த்த, அரசன் புகுதுகவெ

ன்று பிராமணனைக்கூவச் சென்றுபுக்குக்காட்ட வற்றுக்கொண்டு நோக்கி 'பொருளதிகாரம், இது நம்பெருமான் நமதிடுக்கண்கண்டு அருளிச்செய்ததாகற்பாலது' என்று, அத்திசைநோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, 'நம்பெருமான் நமது இடுக்கண்கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம், இதனைக் கொண்டுபோய்ப் பொருள்காண்மின்' என, அவர்கள் அதனைக்கொண்டுபோந்து கனாப்பலகை மேலிருந்தாய்வுழி, எல்லாருந் தாந்தாம் உரைத்தவுரையே நல்லதென்று சிலகாலெல்லாஞ் சென்றன. செல்ல, நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச் சென்று நமக்கோர் காரணிகனைத்தாவென்று வேண்டிக்கொண்டுபோந்து அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய், அல்லெனப்பட்டது அன்றாய் ஒழியக்கொண்டுமென, எல்லாருமொருப்பட்டு அரசனுழைச்சென்றார். அரசனும் எதிர்சென்று, 'என்னை, நுமக்குப் பொருள்கண்டதோ?' என, 'அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்' என, 'போமின், நுமக்கோர் காரணிகனை எங்ஙனங் காண்டுவேன்! நீயிர் நாற்பத்தொன்பதின்மாயிற்று; நுமக்கு நிகராயார் ஒருவர் இம்மையினின்றோ' என்று அரசன் சொல்ல, போந்து கனாப்பலகையின் மீதிருந்து, அரசனும் இது சொல்லினன்; காரணிகனைப் பெறுமாறு என்னைகொல் என்று சிந்திப்புழிச் சூத்திரஞ் செய்தான் ஆலவாயின் அவிர்சடைக் கடவுளன்றே! அவனையே காரணிகனைத் தரல்வேண்டுமென்று சென்று வரங்கிடந்துமென்று வரங்கிடப்ப; இடையாமத்து, 'இவ்வூர் உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனென்பான் பைங்கண்ணன் புன்மயிரன் ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப்பிள்ளை யுளன்; அவனை அன்னனென்றிகழாது கொண்டுபோந்து ஆசனமேலிரீஇக் கீழிருந்து சூத்திரப்பொருள் உரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்

மயிர் சிலிர்க்கும், மெய்யாயினவுரை கேட்டவிடத்து. பொய்யாயினவுரை கேட்டவிடத்து வாளாவிருக்கும். அவன் குமாரதெய்வம்; அங்கோர் சாபத்தினாற் பிறந்தினான்' என முக்காலிசைத்தலால் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர்குலத்தை வலங்கொண்டுபோந்து, உப்பூரிகுடிகிழாருடைய சங்கமெல்லாஞ் சென்று, இவ்வார்த்தையெல்லாஞ் சொல்லி ஐயனுமான் உருத்திரசருமனைக் கால்வேண்டுமென்று வேண்டிக்கொடுபோந்து வெளியது உடீஇ வெண்பூச் சூட்டி, வெண்சாந்தணிந்து கணைமாப்பலகையேற்றிக் கீழிருந்து சூத்திரப்பொருளுரைப்பா, எல்லாரும் முறையே யுரைச்சுக்கேட்டு வாளாவிருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்தவிடத்து ஓரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்த்தி, பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரர் உரைத்தவிடத்துப் பதந்தொறுங் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப விருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து மெய்யுரை பெற்றாம் இந்நூற்கென்றார்."

ஆலாசிய மான்மியத்திலும் திருவிளையாடற் புராணத்திலுங் கூறப்படுங் கதை, மேற்கூறியதினின்றும் மூற்பகுதியில் வேறுபடுகின்றது. நக்கீரன் மதுரைச்சோமசுந்தரக்கடவுள் சொல்லிய * பாடலிற் குற்றங்கூறிய பெருமானைக் கோபமூட்டியபோது கடவுள் நெற்றியினெருப்புக்கண்ணினால் அவனை யுருத்துநோக்கலும், அவன் தன்மாட்டு நிகழ்ந்த வெம்மையைப் பொறுக்கமுடியாது பக்கத்திருந்த சிவதீர்த்தமாகிய பொற்றாமரைத் தடத்துத் தாவிவீழ்ந்து வெம்மையாறினன். அதன்பின் நக்கீரன் தான் கோபமூட்டிய கடவுளை நாடோறும் மும்முறை வணங்கத்தலைப்பட்டு நெடுங்காலம் வழிபட்டு

* கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

யாக்கினன். இறைவனு மவன்பாற் சங்கோசமுற் றக் குணக்குன்றை பின்வருமாறு ஆலோசியாநின்றான் " இந் நக்கீரன் திராவிட சூத்திரங்கள் அறிந்திலன் ஆதலின், மொழியியல் புணராதொழிந்தான். அதான்றியும், யாப்பியல் புணர்ச்சியிலனாதலின் நல்ல நூல்களின் குறைநிறைகளை யறிந்தனுபவிக்கு மாற்றலிலனாயினன். இவன் *திரா விட சூத்திரங்களை நன்குணரும்வண்ணம் யாதென்ன செய்யலாம் '' என்றுகருதுழி, அன்னையொடும் அரு கில் வீற்றிருந்த பார்வதியம்மையார் இறைவன் கருத்துக் களையுய்த்துணர்ந்துகொண்டு " என்னிறைவ ! நீ கருது வதின்னதென் றுணர்ந்தேன். நின்விருப்பத்தினை நிறை வேற்றற்குரிய வழியொன்று கண்டுபிடித்துளேன். அத னைச் சொல்லுவல் கேட்டி : முன்னொருகாலத்துப் பதி னெண்தேவகணங்களு மொருங்குகூடி நீ கைலாயமலையி லிருப்புழி யொருவிடயங்கருதி நின்னைப் பார்க்குமாறு வரலும் பாரம்பொறாது வடபுறந்தாழ்ந்து தென்புற முயர்ந்ததாக, அன்னாரனைவரும் பயந்து நடுநடுங்கி நின் றனை நோக்கிப் பூமியைச் சமன்செய்யவேண்டுமென்று குறையிரந்தார்கள். அப்போது நீ அகத்தியனையும் அவ னறன் மனைவி லோபாமுத்திரையினையுந் தவிர்த்து நின் னையுமென்னையும் நிகர்ப்பார் வேறெவருமிலரென் றுரைத்து அகத்தியனை விளித்துப் போதியோ வென லும், இருடியர்குழாத்துளிருந்த அவன் எழுந்துநின்று வணங்கிக் கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு நின்றனை நோக்கி ' அண்ணலே ! நின்றன் ஆணையின்வண்ணம் யான் தென்றிசைக்கு ஏகுவேனேல் ஆண்டு வழங்குவது தமிழ்ப்பாஷையன்றோ ? அதனை ஒருசிறிதுமறியாத யான் எவ்வணம் அவர்களோடும் உறவாடுவேன் ? யான் அந்நாட்டினர்க் குரைக்கும்வண்ணம் திராவிடசூத்திரங்

* இவை ஆரிய மான்மியத்தில் ஐம்பத்தெட்டாவது அத்தியாயத்திற் கடவுள் செய்தனவாகக் கூறப்படும் அதிகாரமென்னுந் திராவிட சூத்திரங்களைக் குறிக்கும்.

களை யடியேனுக்கு உபதேசிக்குமாறு திருவுளம்பற்றவேண்டும்' என்றனன். உடனே நீயு மதற்குச் சூத்திரங்களை யுபதேசித்தனை. நின்னை வழிபடுவதில் மிகவும் பக்திமேவிய இந்நக்கீரனுக்கு அவ்விருடியைக்கொண்டு அச்சூத்திரங்களை யுபதேசிக்கலாம்" என்றனர். அம்மையார் கூற்றிற் குடன்பட்ட சிவபிரான் அகத்தியனைப்பற்றித் தன்மனத்தில் நினைத்தலும், அவ னொரு தெய்வாதத்தின்மீது மதுரையிற் கடவுள்முன்னர்ப் பொன்னெனத் தோன்றினன். உடனே நக்கீரனும் நீராடி வெண்ணீறணிந்து வெள்ளாடையுடுத்துப் பெருமான் சந்நிதிக்கட் போந்தனன். அதன்மேற் கடவுளின் ஆணைப்பிரகாரம் அகத்தியன் திராவிட சூத்திரங்களை நக்கீரற்குரைத்து அவனைத் தெருட்டினன். அதன்மேற் பார்வதி யம்மையார் இறைவனை நோக்கி "நக்கீரனுக்குச் சூத்திரங்களை நீவிர் நேரே யுபதேசியாது அகத்தியனைக்கொண்டுரைத்த தென்னை?" என வினவலும், இறைவன் புன்முறுவல் பூத்து "தன்னை வழிபடுவோரும், தனக்குப் பொருணனிகொடுப்போரும், பொறுமையிலாரும், ஆசிரியன்றனை கடவாருமே நல்லறிவச்சுடர் கொளுத்தப்படத் தக்காரேயன்றி யேனையோரல்லர்" என்றனன். நக்கீரன் அதன்மேல் அச்சூத்திரங்களைக் கபிலற் குரைத்தான். அவன் மற்றைய சங்கப்புலவர்க் குரைத்தான். (ஆலாசியமான்மியம் 60-ஆம் அத்தியாயம் பார்க்க.) அவர்கள் அச்சூத்திரங்கட் குரைசெய்து அவ்வுரைகளுள் எது மிகச்சிறப்புடைத்தென்று தீர்மானிப்பதில் ஒருவரோடொருவர் மாறுபட்டனர். திருவிளையாடற் புராணத்தில்,

"தேய்ந்த நாண்மதிக் கண்ணியா னுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையிற் பொருதுபொற் பங்கயத் தடத்து
ளாய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தன னவனைக்
காய்ந்த நாவல னிம்மெனத் திருவுருக் கரந்தான்."

எனத் தருமிக்குப் பொற்கிழியளித்த படலத்தினும்,

அக்கீர வேலை யால மயின்றவெங் கருணை வள்ள
லிக்கீர மழலைத் தீஞ்சொ லிறைவியோ டெழுந்து போந்து
நக்கீரன் கிடந்த செய்பொ னளினப்பூந் தடத்து ஞாங்கர்ப்
புக்கீர மதுரத் தீஞ்சொற் புலவர்தங் குழாத்து னின்றான்.
அனற்கணு நோக்கி னன்பி னருட்கணு நோக்க வாழ்ந்த
புனற்கணே கிடந்த கீரன் பொதிபுலன் கரண மெல்லாங்
கனற்கனார் தமவே யாகக் கருணைமா கடலி லாழ்ந்து
வினைக்கணே யெடுத்த யாக்கை வேறிலன் புருவ மானான்

எனக் கீரனைக் கரையேற்றிய படலத்திலும்,

"பொன்னனை யாளொடுங் குறுமுனி விடைகொடு போன
பின்னை யாருயிர்க் கிழத்தசன் பிராணனைநோக்கி
யென்னை யீயிவற் புணர்த்திடா திதுநுவைப் பொதியின்
மன்னை னாலுணர்த் தியதென மதுரநா யகனும்.
[illegible]ன்னை நித்தலும் வழிபடுந் தவத்தியோர் சாலப்
பொன்னை ளிப்பவர் தொடுத்தமற் சரமிலாப் புனிதர்
சொன்ன சொற்சட வாதவர் தகடவிர் நெஞ்சத்
தின்னா ளர்க்குநூல் கொளுத்துவ தறனென விசைப்ப.
இவனை நித்தமற் சாத்திறைல் யாமுணர்த் தாதத்
தவனை விட்டுணர்த் திலமெனச் சாற்றினுன் கேட்டு
அவனை விட்டக மகிழ்ச்சிகொண் டிருந்தனள் கதிர்கா
ன்மை மணிசகலம் பூத்தசோர் கொடிபுரை நங்கை."

எனக் கீரனுக் கிலக்கணமுபதேசித்த படலத்திலுங் கூறுமாறு காண்க. இனி இக்கதையின்மீதுமுள்ள பகுதி நக்கீரரது இறையனாரகப்பொருளுரையின்கட் கூறப்பட்டதனோடு முற்றுமொத்திருத்தல் காண்க.

இறையனாரகப்பொருளின் உற்பத்தியைக் குறித்துக் கூறும் மேற்கூறிய இரண்டுகதைகளையும்பற்றிச் சீர்தூக்கி யாராயுமிடத்து அவை தம்முள் மிக்க வேறுபாடுண்டெனக் காண்கின்றாம். நக்கீரருரையின்கண்ணே, பொருளதிகாரம்வல்ல புலவரின்மையான் மதுரைச் சோமசுந்தரக்கடவுள் தானே அதுவிடயமாக ஒருநூ லியற்றி, அதனைச் செப்புத் தகட்டினில் வரைந்தனனென்று கூறப்பட்டுளது. ஆனால் ஆலாசியமான்மியத்தின்வண்ணம்

சூத்திரங்களை அகத்தியன் சிவன்பாற்கற்றுணர்ந்து அதனைப்பின் நக்கீரற் குபதேசித்தானென்பது. திருவிளையாடற் புராணத்துச் சங்கப்புலவர்கள் அச்சூத்திரங்களுக்கு உரையெழுதினார்களென்பது குறிக்கப்படாமை ஈண்டெடுத்துரைக்கற்பாற்று. ஆண்டுக் கூறப்பட்டது 'செந்தமிழ்' என்பதே. அதனைப் பின்வரும் பாடலிற் காண்க.

"அருந்தமில் கேள்வி யோரெண் ணறுவரும் வேறு வேறு
செந்தமிழ் செய்யுள் தம்மிற் செருக்குறு பெருமை கூறித்
தந்தமின மாறாய்த் தத்தஞ் சாதர மனைச்ச வல்ல
முந்தைநூன் மொழிந்த வாசான் முன்னர்வந் தெய்தினாரே"

—திருவிளையாடற் புராணம்.

மேற்கூறிய இருவகைக் கூற்றுக்களும் பெரும்பாலும் கட்டுக்கதையுங் கற்பிதமுமா யிருத்தலன்றி நக்கீரர் கூற்றுச சிறிது பூர்வாபரவிரோத முடைத்தென்பதுங் காணப்படுகின்றது. நக்கீரர் முதற்கட் பொருளதிகாரம் வல்லாரொருவருமிலரென்று மேற்கொண்டு பின்னர்த் தொல்காப்பியப் பொருளதிகாரத்தினின்றும் ஏனைய நூல்களினின்றும் அடுக்கடி மேற்கோள்கள் எடுத்துரைத்துத் தமக்கு அந்நூல்களின்கண் தக்கஆராய்ச்சி யுண்டெனக் காட்டுதல் முன்பின் முரணுமாறு காண்க. அக்காலத்துத் தொல்காப்பியமுமிருந்து அதன்கண் நக்கீரரும் பயின்றிருந்தனரேல் அறுபது சிறிய சூத்திரங்கள் மட்டுமே யடங்கிய இவ்விறையனாரகப்பொருளென்னுஞ் சிறுநூலியற்றவேண்டிய அவசியமேயின்று. அன்றியும், தொல்காப்பியரது பொருளதிகாரம், அஃதெழுதப்பட்ட நாண்முதல் அவ்விஷயத்திற் சிறந்த மேற்கோணூலாகவும், எல்லாப்பண்டிதர்களாலும் பிற்காலத்து நூல்களிற் பெரிதும் அதன் சூத்திரங்கள் ஆசிரிய வசனமாகக் கொள்ளப்பட்டு மிருக்கின்றது. அது மிகவும் விரிந்த நூல்; அவ்விஷயத்தை மிகவும் நன்றாய் எடுத்து விளக்குவது. இத்தகைய நூலிருப்பவும் சிறியதுங் குறை

பாடுள்ளதுமாகிய இவ்விறையனாரகப்பொருள் எழுதி யமைக்குத் தக்க காரணந் தோற்றவில்லை. நக்கீரர்கூற்றில் மற்றொரு மாறுகொளக்கூறலு முளது: அஃதென்னையெனின், பொருளதிகாரம் வல்லாரொருவரு மிலராகவும் அவ்விஷயமுணர்ந்து அந்நூலிற்கு உரைவகுக்கும் ஆற்றலுள்ள புலவ ரிருந்தனரென்பதே.

அவர்கள் இவ்விடயத்தை யெவ்வாறு கற்றனர்? அதைப்பற்றி உரைவகுக்கவும் அச்சிறிய மூலநூலினால் எவ்வாற்றானும் பெறுதற்கரிய அறிவளவு புலப்படுத்தவும்வல்ல ஆற்றல் எங்ஙனம் பெற்றனர்? இறையனாரகப்பொருளும் அதனுரையுந் தோன்றியவாற்றினைப் பற்றிக் கூறும் பகுதிகளைக் குறித்துக் கூர்ந்து ஆலோசிக்குமிடத்து, அவை பிற்காலத்துப் புலவரொருவரை விடை போர்த்து நக்கீரருரையி னொருபகுதியெனக் காணப்படத் தக்கவாறு பொதிப்பட்டிருத்தல் வேண்டுமென்று யாம் கூறப்புகலாம். மூன்றுசங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரு ளொருவராய அந்நக்கீரர் தாமே அச்சங்கத்தின் தோற்றத்தையும் இறுதியையுங் கூறியிருத்தலும் அவ்விஷயங்களைப்பற்றிய பகுதியடங்கிய அந்நூல்தானும் முன்னரே யழிவெய்திய வச்சங்கத்தின்கண் அரங்கேற்றப்பட்டதெனலும் ஒன்றற்கொன்று முற்றிலும் முரணுதல் காண்க. அன்றியும், அந்நக்கீரருரையின்கண் அந்நூலுரையாசிரியரின்னரென்பது பற்றிக் கருத்து வேறுபாடு நிகழ்ந்துழி அதனுரையாசிரியர் நக்கீரரேயென ஏனைய பண்டிதர்கள் தெளிதல் கருதிய பிற்காலத்துப்புலவர் சிலரால் அப்பகுதிகள் நூலினிடையே செறிக்கப்பட்டனவோ வென்றையுறத்தக்க வேறுபகுதிகளும் சிலவுள:

“அதனால் உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசருமனாவான் செய்தது இந்நூற்குரை யென்பாருமுளர்; அவர்செய்திலர், மெய்யுரைகேட்டா ரென்க. மதுரை

ஆலவாயிற்பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு, குமாரசுவாமியாற் கேட்கப்பட்டதென்க. இனியுரை நடந்துவந்தவாறு சொல்லுதும்.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம்மகனார் கீரங்கொற்றனார்க்குரைத்தார்; அவர் தேனூர்க்கிழார்க் குரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க் குரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்குரைத்தார்; அவர் மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க் குரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமாரனார்க் குரைத்தார்; அவர் திருக்குன்றத் தாசிரியர்க் குரைத்தார்; அவர் மாதளவனார் இளநாகனார்க் குரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க் குரைத்தார்; இங்ஙனம் வருகின்றது உரை."

மேலெடுத்துக்காட்டியவற்றின் பிற்பகுதியினால் நக்கீரர் தம் மகனாரிடத்தினின்றும் எட்டு ஆசிரியர்கள்காறும், எனவே யொருவாறு எட்டுப் பின்சந்ததிகள்காறும் உரை நடந்துவந்துளதென்பது தெளியக்கிடக்கின்றது. எட்டாஞ் சந்ததிக்கண் ஆசிரியராதல் அவர்தம் மாணாக்கராதல் எண்டுக்கூறிய பகுதிகளனைத்தையும் முச்சங்கங்களையும்பற்றிய பகுதிகளையும் நக்கீரர் தம்முரையினிடையே கோத்திருத்தல் வேண்டுமென்பதற் கையமேயில்லை.

மேற்காட்டிய முற்பகுதியின்கண் இறையனாரகப்பொருட்கு உரைவகுத்தார் நக்கீரரே; உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசருமனல்லனெனக் கூறுங் கூற்றினானே இவ்வுரையப்பாடு மிகவும் வலியுறுகின்றது. இனி மற்றொன்று விரியாது நோக்குழி, முற்கூறியவற்றினானே நக்கீரருரை சங்கத்திற் கொணரப்பட்டு அங்கீகரிக்கப் பெற்றதென்பதனை நாமொருதலையாக் கோடலாம். சல்லாடத்தின் றொடக்கத்திற் காணப்படும் பின்வரும் பா

டலே யுற்றுநோக்குமிடத்துக் கல்லாடமும் அத்தன்மைத் தாதல் வேண்டும் :—

“ கல்லாடர் செப்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார்சங் கத்தின் வதிந்தருளிச்—சொல்லாயு
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்.”

திருவள்ளுவர்தங் குறள் சங்கத்திலரங்கேறியமையைப் பற்றி யஃதுபுரிவொட்டியது மெய்ம்மையேயாயின் இறையனா ரகப்பொருளையுங் கல்லாடமும் அதன்கண் எங்ஙனங் கொணரப்பட்டு எவ்வாறு அங்கீகரிக்கப்பட்டன வாம்? இனி மேல்வருவனவற்றாற் கடைச்சங்கந் தோன்றுதற்குப் பன்னூற்றாண்டுகட்கு முன்னரே திருக்குறள் யாக்கப்பட்டிருந்ததெனக் காண்பாம்; அஃதாவது கரிகாற்சோழன் காலமும் இலங்கைக் கயவாகு முதலாமவன் காலமுமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற் செய்யப்பட்ட சிலப்பதிகார மணிமேகலைகளின் காலத்திற்கு முன்னரென்பதே.

நாமினி யடுத்ததாக ஆராய்ச்சிசெய்யவேண்டுவது மதுரைக் கடைச்சங்கத்துப் புலவரனைவரும் ஏககாலத்தினரேயோ வென்பது; ஏனெனின், அதுவே சங்கமிருந்ததென்பதற்கு மூலாதாரமான விஷயமாயிருக்கின்றது: சங்கத்தின் அவையினராகிய அந்நாற்பத்தொன்பான் புலவரும் ஏககாலத்தினரல்லரென்றேற்படின் அச்சங்கத்தினைப்பற்றிய வனைத்தும் மெய்யெனக் கோடற்கியலாது போவனவேயன்றி அவை பாவலர்கள் தம்மனம்போனவாறுசெய்த கற்பனைகளுளடங்குவனவாகவுங் கருதப்படும்.

இவ்வினாவை விளக்குமுன் *பஞ்சகாவியங்களு ளிரண்டென வெண்ணப்பட்டு மிகவுயரிய நூல்களாகக்

* மற்றையன-சிந்தாமணியும், வளையாபதியும், குண்டலகேசியுமாம்.

கருதப்படுங் காப்பியங்களாகிய சிலப்பதிகார மணிமேகலைகளின் காலத்தை நிர்ணயித்தல் இன்றியமையாததாகின்றது. ஆகவே, முன்னர் அந்நூற் கதையையும் அவைற்றின் றோற்றத்தையும்பற்றிச் சுருக்கிக் கூறுகின்றாம்.

காவிரிப்பூம்பட்டினமென்னும் புகார்நகரத்தின்கண் கோவலனென்னும் பெயரிய வொரு செல்வவணிகனிருந்தனன். அவனுக்குக் கண்ணகியென்னும் பெயரிய மனைவி யொருத்தியுண்டு. இவ்விருவருஞ் சின்னாளின்புற்று வாழாநிற்ப, ஒருநாள் அரங்கேற்று நாடகக்கணிகையரு ளொருத்தியும் ஆடல்பாடலழகுகளிற் சான்றவளாகிய மாதவியென்பாள் கரிகாற்சோழற்றன் அவைக்களத்தே யரங்கேறியபொழுது ஆண்டுப்போந்திருந்த கோவலன் அவள்மீது காமுற்று அவள்பாற்பட்டனன். அன்றியும், அவள் காரணமாகத் தன்பொருளனைத்தையுஞ் செலவிட்டு வறிஞனாயினான். அதன்பின் ஒருநாள் மாதவியோடு பிணங்கிக் கவற்சியுற்று மனந்திரும்பித் தனதில்லஞ்சென்று தன்மனைவி கண்ணகியோடும் இரங்கிக்கொண்டிருப்புழி யவளாற்கொடுக்கப்பெற்ற சிலம்பொன்றைக் கைக்கொண்டு அதனைவிற்று வாணிகமுதலாக்கொண்டு வியாபாரஞ் செய்தற்பொருட்டுக் கோவலனுங் கண்ணகியுமாகிய அவ்விருவரும் பாண்டிநாட்டின் மதுரையம்பதிக்குச் சென்றனர். சென்று தங்கியபின் கோவலன் அவ்வயி னொருபொற்கொல்லனைக் கண்ணுற்றுத் தன்கையிலுள்ளதைக்காட்டக் கண்ட அத்தீயவன் கோவலனை அவ்விடமே யிருக்கவென்று கூறி யரண்மனைக்குட்சென்று, தான் அரசன் றேவியினது சிலம்பைத் திருடியது வெளியாகாமைப்பொருட்டுக் கோவலனை மாட்டக்கருதி, அரசனிடத்துத் தேவியார் சிலம்பைத் திருடிய கள்வன் அரண்மனைப்புறத்துளனென்று கூறினான். அதுகேட்ட வழுதி 'அவனைக்கொன் றச்சிலம்பைக் கொணர்திர்' என்று தன் காவலர்கட்கு ஆணையிட்டான்.

அவ்வாறே அவர்கள் சென்று கோவலனைக் கண்டபுழி அவனைக் கள்வனாமெனக் கருதினாரேனும் அப்பொழுது கொல்லனது நாவன்மையினாற் றூண்டப்பட்ட களிமக னொருவன் றுணிந்து கோவலனை வாளாலெறிந்து கொன் றனன். இஃதுணர்ந்த கண்ணகி கோவென்று வாய்விட்டுக் கதறியழுது அரசனவைக்களம் புக்கு அரசன்பால் முறையிட்டு வாதாடி மன்னவற்கு அரசிலம்பு தன்னதே யன்றி அவன்றேவியாரதன்றென்பதைத் தக்கவாறு காட்டக் கண்ட வேந்தன் நெடுஞ்செழியன் றனது வழக்குவினை தோற்றதேயன்றி உயிருந் தோற்றுத் தானிருந்தவாறே அரியாதனத்தினின்றும் வீழ்ந்திறந்தான்; அவன்றன் தே வியு மிறந்தாள். இனிக் கண்ணகி யத்துணையிலமையாது தனது கொங்கைகளுளொன்றைத் திருகியெறிந்து மதுரை நகர்மீ தெறிந்தாள். அதுபற்றி யுடனே நகர்முழுதுந் தீப்பிடித்தெரியத் தலைப்பட்டது. உடனே அந்நகர்க்கா வற்றெய்வங் கண்ணகிக்கு வெளிப்பட்டுத் தோன்றி அவை யின் நிகழ்ந்தனவெல்லாம் முன்னைவினையாலென்று அவளைத் தெருட்டி அவள் தன் கணவனாகிய கோவலனையற் றைக்குட் பதினான்காவதுநாட் காண்பாயென்று கூறி மறைந்தது. ஆண்டுச் சிவன்கோயிலொன்றிற் படுத்திருந் த சீத்தலைச்சாத்தனார் இவையனைத்தையுங் கண்டுங் கே ட்டுமிருந்தனர். அவளு மவ்வாறேசென்று திருச்செங் கோடென்னு மலைசேர்ந்து பதினான்காநாட் கணவனைக் காணப்பெற்று விமானமேறி அவனோடும விண்ணகம் புக்கனள்.

இவ்வாறு கண்ணகிமாட்டிழைத்த தீங்கினிமித்தம் பாண்டியநாடு பஞ்சத்தினாலும் பல்வகைப்பட்ட பிணியி னாலும் வருந்திற்று; அதுகண்ட கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் அவட்கு ஆயிரம பொற்கொல்ல ரைக் கொன்று பலியிட்டுக் களவேள்விவேட்டு அவள் சினந்தணித்தானாதலின், அதுதொடங்கிப் பாண்டிநாடு

மழைவளங்குன்றாது விளையுள்பெருகிச் சுகமடைந்த தென்ப. அது பின்வரும் பகுதியால் விளங்கும்

“அன்றுதொட்டுப் பாண்டியனாடு
மழைவறங் கூர்ந்து வறுமையெய்தி
வெப்பு நோயுங் குருவுந் தொடரக்
கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்
நங்கைக்குப் பொற்கொல்ல ராயிரவரைக் கொன்று
களவேள்வியால் விழவொடு சாந்திசெய்ய
நாடுமலிய மழைபெய்து நோயுந்துன்பமு நீங்கியது.”

அதுதெரிந்த கொங்குநாட்டிறைவர் இளங்கோசரு மவ்வாறு செய்ய அவனாடும் அன்னதாயிற்று. அது பின்வரும் பகுதியிற் காண்க:—

“அதுகேட்டுக்
கொங்கிளங் கோசர் தங்கணாட் டகத்து
நங்கைக்கு விழவொடுசாந்திசெய்ய
மழைதொழி லென்று மாறாதாயிற்று.”

அஃதுணர்ந்த கயவாகுவென்னு மிலங்கையரசனு மவ்வாறே கண்ணகிக்குக் கோயில் பலிபீடமுதலியனவமைத்துப் பலியிட்டு ஆடித்திங்களில் விழாவாற்றலும் அவன்றன்

* 'இளங்கோசர்' என்னு மிச்சொல் பிழையெனக் காணப்படுகின்றது. இத்தொடர்மொழிக்கண் 'இளம்', 'கோ' என்ற விருமொழிகளும் முறையே 'இளை' எனவும், 'அரசன்' எனவும் பொருள்படுகின்றன; எனினு மிறுதியினின்ற 'சர்' என்பது இவ்விடத்துப் பொருள்படுமாறில்லை. ஏறக்குறையக் கி. பி. 8-வது நூற்றாண்டுகாறும் சேராச்சியத்தைச் சேர்ந்திருந்தது கொங்குநாடு; அதன்பின்னர்த் தலைக்காட்டுச் செருவிற் சோழனாற் சேரன்கொலையுண்டபோதுதான் கொங்குநாடு வேறு பிரிந்தது. இக்காப்பிய மெழுதப்பட்ட காலத்துக் கொங்குநாடு சேராச்சியத்துட் சேர்ந்திருந்தமையான் அச் சேரராசனுக்குக் கிறையிறுக்குங் குறுநில மன்னனொருவனா லாளப்பட்டிருக்கவும் வேண்டும். இனிக் 'கொங்கிளங் கோசர்' என்ற இச்சொல் ஒருவேளை 'கொங்கிளங்கோச்சேரல்' என்பதன் மரூஉவாயிருக்கலாம். பிற்கூறிய தொடர்மொழியினிறுதியினின்ற 'சேரராசன்' எனப் பொருள்படுஞ் 'சேரல்' என்ற சொல் 'சர்' என மருவியதுபோலும். அற்றேல் 'கொங்கிளங் கோசர்' என்னு மத்தொடர்மொழி 'கொங்குநாட்டுச் சேரச் சிற்றரசன்' எனப் பொருள்படும்.

நாடும் இன்பமடைந்து விளையுள் பெருகிற்று. அதனை மேல்வரும் பகுதியிற் காண்க

"அதுகேட்டுக்

கடல்சூழிலங்கைக் கயவாகுவென்போன்
நங்கைக்கு நாட்பலிபீடிகை கோட்டமுந் துறுத்தாங்
கரந்தை கெடுத்து வரந்தரு மிவளென
ஆடித் திங்க ளகவயி னாங்கோர்
பாடி விழாக்கோள் பன்முறை யெடுப்ப
மழைவீற் றிருந்து வளம்பல பெருகிப்
பிழையா விளையு ணாடா யிற்று."

பிற்கூறப்படும் பகுதியிற் காணப்பட்டவாறு சோழராசன் பெருநற்கிள்ளியும் உறையூரென்ற கோழிநகரத்துக் கண்ணகிபொருட்டுக் கோயில்கட்டி விழாவெடுத்தனன்; அவனூடும் நன்மையெய்திற்று :—

"சோழன் பெருங்கிள்ளி கோழி யகத்து*
எத்திறத் தானும் வரந்தரு மிவளோர்
பத்தினிக் கடவு ளாகுமென நங்கைக்குப்
பத்தினிக் கோட்டமுஞ் சமைத்து
நித்தல் விழாவணி நிகழ்வித் தோனே."

மேற்கூறிய பகுதிகளிற் சொல்லப்பட்ட விஷயங்கள் யாவும் சிலப்பதிகாரநூல் யாக்கப்பட்டதற்கு முன்னரே நிகழ்ந்திருத்தல்வேண்டும். அந்நூல் தோன்றியவாறு பின்வருவதாம் :—

இளங்கோவடிகளென்பார் சேரராசரு ளொருவனாகிய செங்குட்டுவன்றம்பி. அவ்விருவரு மிளைஞராயிருக்குங் காலத்து ஒரு நிமித்தஞ் சொல்லுவோன் அவர்களிடம் போந்து சாமுத்திரிகாலட்சண சாஸ்திரத்தின்படி அவ்விருவர்தம் உடலினு முள்ள குறிகளை யாராய்ந்து அவர் தம்முள் இளையவனுக்கு அரசாள்பெற்றியுண்டு என்று சொற்றனன். அங்ஙனஞ்சொற்றது அவ்வயினிருந்த மூத்தவனாகிய ஏகசக்ராதிபத்தியஞ் செலுத்தலாமென்

றெண்ணிய செங்குட்டுவற்கு மிகவும் மனவருத்தத்தை யுண்டாக்கிற்று. தமது தமையன் இதுபற்றி மனங்கவல்கின்றானென்பதுணர்ந்த தம்பி, தனக்கு எக்காலத்திலேனும் அரசாளவேண்டுமென்ற விருப்பம் நிகழ்ந்திற்றிலதென்று வலியுறுத்திச் சாற்றியதேயன்றி, அக்கணமே துறவுபூண்டு அருகதேவன்றன் கோயிலொன்றினின்று தன் வாணாளைக் கழித்துவருவாராயினான். * அவ்வயினொருநாட் செங்குட்டுவன் தன்பாற் பரிசில் பெறுவான்போந்த பாவலராய சீத்தலைச்சாத்தனாரோடு துறவுபூண்ட தன் றம்பியைக் காணவந்த காலத்துச் செங்குன்றின் முதுகுடிமாக்கள் ஒருங்குகூடிவந்து, "மதுரையிற் கொலையுண்ட கோவலன் றெய்வவுருவினைத் தேவர்கள் விண்ணிற் போந்து அவன்மனைவியாகிய கண்ணகிக்குக் காட்டினார்கள். அவள் ஒரு தனமிழந்தவளாய் வேங்கைமாக்குளிர் நீழலில் அதுகாறும் வீற்றிருந்தனள். உடனே யாங்களனைவரும் பார்த்து வியந்துநிற்க அவள் தன் கணவனோடும் விண்ணினில் மறைந்தனள்" என்று விண்ணப்பித்தனர். அப்போழ்தத் தருகினிருந்த சீத்தலைச சாத்தனார் அச்செய்தி தமக்கு முன்னரே தெரியுமென்றுரைத்து நிகழ்ந்த விஷயம் யாவற்றையும் விரித்துக்

* 'அடிகளென்றது, அறத்தலான். அத்துறவின வரலாறு யாதோவெனின், -"குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட, சேரலாதற்குத் திகழொளிஞாயிற் றைம்பரி நெடுந்தேர்ச் சோழன்றன் மகள், நற்சோணை யீன்ற மக்க ளிருவருள், முன்னோனை றணவைய பின்னரியறிப், பின்னோனை தன்னையும் பெருநம்பாகென, வள்ளவர் தம்மொடு தெவ்வர் சேமபியர், தன்னடி போற்றுத தமனிய மணடபத்துச், சிகைகஞ்சுமந்த பொங்கணை மீமிசை, புவர்த்திரையிற் கவரியிரட்ட, வோர்தனிருந்துழிச் சார்ந்த நிமித்திக, னடிமுதன் முடிவரை நெடிது நோக்கி, பின்றோன் கழிப்பப் பொன்றிகழுலகஞ், சோதிநீயெனச் சேரலற குரைத்தலன், மைந்தரை நோக்கி நந்தாச்செங்கோ, லந்தமி லின்பத் தரசாளுரிமை, யிளையோற் குண்டென வுளைவ னன்வெகுண்ட, டழுககாற் றொழுக்கத, திழுக்கு நெஞ்சினன், கணனெரி தவழ வண்ணலை நோககுங், கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச், செங்குட் டுவன்றன் செல்வ நீங்கப், பகல்செல் வாயிற் படியோர்தம்மு, னகலிடப் பார மகல நீக்கிச், சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத, தந்தமி லின்பத் தரசாள் வேந்தாயினனென்பது"'—சிலப்பதிகாரம்—பக்கம்—

கூறினார். அதுகேட்ட இளங்கோவடிகள் அவ்விஷய மாக ஒரு காப்பியம் புனைவேனென்றார். உடனே சீத்தலைச்சாத்தனாரும் அரசப்பாவலர் கூறிய கருத்தை யங்கீகரித்தனராகிய அவ்விஷயங்கள் நிகழ்ந்த காண்டங்களை வரைய முந்நாட்டுத் தலைநகராகிய புகார், மதுரை, வஞ்சிகளிலாதலின் அதனை யாத்தற்கு அரசனே யெவ்வாற்றானு பெற்றவனென்றுங் கூறினார். அதன்மேல் சீத்தலைச்சாத்தனார் சிலப்பதிகாரக்கதையின் தொடர்பியாய மணிமேகலை துறவைப்பற்றி மணிமேகலை யென்றொரு காப்பியம் புனைந்தார். கோவலன் பிரியநாயகியாயிருந்த நாடகக்கணிகை மாதவியின் மகளாகிய மணிமேகலையே அக்காப்பியத்தலைவியாதலின், அஃது அப்பெயர்த்தாயிற்று.

சிலப்பதிகார வுற்பத்திவிடயமாக மேற்கூறியவற்றினின்றும், அந்நூலாசிரியராகிய இளங்கோவடிகளும், மணிமேகலைக் காப்பியம் புனைந்தவரும் கணவனை யிழந்த கண்ணகி அற்றைக்குப் பதினான்காநாள் தன் கணவனைக் காண்பாளென் றவட்கு வெளியுறுத்திய மதுரைநகர்க்காவற்றெய்வதங் கூறியபோது கண்டுகேட்டவருமாகிய சீத்தலைச்சாத்தனாரும், சிலப்பதிகாரக்கதையிற் போதருவோருட் சிறந்தவராய கண்ணகியும் மாதவியுங் கோவலனும் ஏககாலத்தின ரென்பதூஉம், மாதவி கரிகாற்சோழனவைக்களத்தரங்கேறினமையின் அவரனைவரும் அக்கரிகாற்பெருவளத்தான் காலத்தின ரென்பதூஉம் எளிதிற் காணலாம்.

கண்ணகி நிமித்தந் தங்கடங்கணாட்டிற் கோயில்கட்டி விழாவெடுத்த கொற்கையாளி * வெற்றிவேற் செழியனும், சோழராசன் பெருநற்கிள்ளியும், கொங்குநாடாண்ட இளங்கோசரும், இலங்கைவேந்தன் கயவாகுவுமாகிய இவர்களது காலத்தினர் மேற்கூறியோரனைவரு மெ

* ஆலாசிய மான்மியத்தின்படி இவ்வரசன் கரிகாற்சோழன் காலத்தினனாகிய இராசசேகரபாண்டியனாதல் வேண்டும்.

ன்பதூஉம் பெற்றாம். ஈண்டு முதற்கட் குறித்த மூவா
சர்களின் காலமும் எவ்வாற்றானு மறிதலியலவில்லை;
ஆனா லிலங்கைச் சரித்திரங்களி னாராய்ச்சியாற் கடை
பிற்கூறிய அரசன்றன் காலத்தினை யொருவாற்றா னேறக்
குறைய வரைந்து சுட்டலாம். "இலங்கைப்படைகளின்
பூர்வ வுத்தியோகத்த ரொருவர் செய்த விலங்கை" என்ற
பெயர்கொண்ட இலங்கைத்தீவின் சரித்திரங் கைக்கொ
ண்டு ஆராய்வான் புகுந்தனம். அதன்கண் கி. மு. 543-
ஆம் ஆண்டு இலங்கைத்தீவுசென்று ஆண்டுபௌத்த
மதத்தை நிலைநாட்டிய முதல் ஆரிய வரசனாகிய
விஜயன் என்பவன் முதலாகவுள்ள இலங்கையரசர்கள்
வரிசையொன்று, பெரிது காணப்படுகின்றது. அவ்வரி
சையின்கண் கி. பி. 113-ஆம்வருஷ அரசாளத் தொடங்கிய
வொருவனும், கி. பி. 1117-ஆம் வருஷ அரசுரிமை யெய்திய
மற்றொருவனுமாக விரண்டு கஜபாகுக்கள் கூறப்படுகின்
றனர்; அவர்தமுள் ஒருவனாதல் வேண்டும், ஆராய்ச்சிக்
குள்ளா கயவாகு. இவ்விருபெயர்களை யொன்றெனக்
கூறுமிடத்து, இலங்கைச் சரித்திரத்திற் கூறிய 'கஜ
பாகு' என்ற பெயர், யானைத்துதிக்கைபோலுங் கரங்க
ளுடையானெனப் பொருள்படும் வடசொல்லேயாம்.
கி. மு. 477 - முதல் 457 - காறும் மகாநாம னென்பவ
னால் வரையப்பட்ட 'மகாவம்சம்' என்னும் பூர்விக
விலங்கைச் சரித்திரம் எழுதப்பட்ட ஒருவகைப் பிரா
கிருதமாகிய பாளிபாஷையின் வழியாய் அச்சொல் வரு
கின்றது. ஆனால் 'கயவாகு' வென்னுந் தமிழ்ப்பெயர்
'கஜபாகு' வென்ற ஆரியச் சொல்லின் சிதைவாம்.
சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட இலங்கையரசன் இலங்
கை முதற் கஜபாகு வாதல்வேண்டும். ஏனென்றால்,
கி. பி. 1064 - ஆம் ஆண்டுமுதல் கி. பி. 1113 - ஆம்
ஆண்டுகாறும் அரசாண்ட குலோத்துங்க சோழன்
காலத்திற்கும் பிற்பட்ட காலமாகிய கி. பி. 1117-ஆம்
ஆண்டு இரண்டாங்கயவாகு அரசாளத்தொடங்கியதா

கக் கூறப்படுகின்றமையி னென்க. முதற் கரிகாற்சோழன் குலோத்துங்க சோழற்குப் பலநூற்றாண்டுகள் முற்பட்டவனாதலின், (சென்னைச் சிலாசாதன பரிசோதகர் அறிக்கைப் பத்திரிகை. சம்புடம் IV. 205-ஆம் பக்கம் பார்க்க.) அவன் முதற்கஜபாகுவின் காலத்தினனாதல்வேண்டும். ஆயின், தென்னிந்திய சிலாசாதன பரிசோதகர் அறிக்கைப் பத்திரிகைகளிற் குறிக்கப்பட்ட பல்வகைப்பட்ட சிலாசாதனங்களினுங் காணப்படுமாறு அப்பெயர் பலசோழராசர்கட்கு மிடப்பட்டுளதென வாதிக்கலாமாயினும் நந்தம் ஆராய்ச்சி தொல்லைத் தமிழ்நூலாசிரியராற் குறிக்கப்பட்ட அக்கரிகாலனைப்பற்றியேயாம். அதுவும் யாம் அறிந்தமட்டி லொரேயொரு கரிகாலனைக் குறிக்கின்றது. பின்வரும் பொருநராற்றுப்படையின் ஒருபகுதியிற் கண்டவாறு அக்கரிகாலன் றந்தை * இளஞ்சேட்சென்னி யென்பான் :—“வெல்வே லுருவப் பஃறே ரிளையோன் சிறுவன்” என்றதன்மேல் அதனுரைகாரர், “வென்ற வேலினையுடைய அழகினை யுடைத்தாகிய பலதேரினையுடைய இளஞ்சேட் சென்னியுடைய புதல்வனை” என்று கூறுகின்றனர். மேற்கூறிய உரைகாரர் ஆசிரியர் நச்சினார்க்கினியர் இன்னு மோரிடத்து,

“உருவப் பஃறே ரிளஞ்சேட்சென்னி அழுந்தூர் வேளிடை மகட்கோடலும் அவன் மகனாகிய கரிகாற்பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட்கோடலும்” என்றுங் கூறுகின்றனர். (தொல்காப்பியப் பொருளதிகாரவுரை பார்க்க.)

‘கரிகாலன்’ என்னும் பெயர் விஷயமாக ஆசிரியர் நச்சினார்க்கினியர் தாம்வகுத்த பொருநராற்றுப் படையி

* செவ்வந்திப் புராணத்தின்படியும் பழமொழியுரையின்படியும் அவன்றன் வடமொழிப்பெயர் ‘பராந்தகன்’ என்பதாம். தமிழ்நூல்களெல்லாம் முதன்முதலிற் கரிகாலனெனப் பெயர்பூண்ட அவ்வரசனையே கூறுதலின் மேலே யாங்கண்டுபிடித்து எடுத்துக்கூறிய அவன்றன் றந்தையின் வடமொழி தென்மொழிப்பெயர்கள் சோழராசர்களது வமிசாவளி விஷயமாக மிகப் பயன்படலாம்.

னுளையினிறுதியில் தாமேயியற்றியனவோ, அன்றி நூலி னிறுதிக் கூற்றுப் பொதிந்தனவோ, மூன்றுபாடல்கள் சேர்த்திருக்கின்றனர். அவையிற்றினு ளொன்று பின் வருமாறு

"முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகா
லிச்சக் கரமே யளந்ததால்—செய்ச்செ
யரிகான்மேற றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று."

மேற்போந்த செய்யுளினாற் கரிகாலனென்னும் பெயர் அவ்வரசற்குக் கால்நீப்பறறி வெந்து கரிந்தமை காரண மாக வந்த பெயரென்பது தெரிந்தாம். இப்பெயர் அவ்வாறு உள்ளபடியே கரிந்தகாலுடைய அவ்வரசற்கு இட்டுழியே பொருட்பெற்றி சிறக்குமேயன்றி அப்பெயரை மரியா தைச்சின்னமாகக் கொண்ட பின்சந்ததியார்க் கிட்டுழிச் சிறவாமை தெள்ளிதிற் றுணியப்படும். ஆதலின், மேலெ டுத்துக்காட்டிய பகுதிகள் முதற்கரிகாலனையே குறிக்கு மன்றி அவன்றன் பின்சந்ததியாரைக் குறியாதென்பது திண்ணம். யாம் சரித்திர பூர்வகமாயும் புராதனகிரந்த பூர் வகமாயும் கரிகாற்சோழன்காலமும் இளங்கோவடிகள் காலமும் சீத்தலைச்சாத்தனார் காலமும் கடைச்சங்கத் தோற்றத்திற்கு முன்னரெனவும், இலங்கையிற் கி. பி. 113-ஆம் ஆண்டு முதற்கயவாகு அரசாளப் புக்கபோது கரிகாற்சோழன் சிறந்து விளங்கினனெனவும், எனவே சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கடைச்சங்கநூல் கட்கு முன்னரே யாக்கப்பட்டனவெனவுங் காண்கின் றாம். இனிக் கரிகாற்சோழன் காலத்தை இன்னொரு விதமாகவும் பொதுப்பட நிர்ணயித்து அது கடைச்சங் கக்காலத்திற்கு முற்பட்டதென நிறுவுதலுமாம். வமிச சேகரபாண்டியன் காலத்திலேயே கடைச்சங்கந் தோன் றிற்றென யா மறிவோம்; அவற்குமுன்ன ரேதேனுஞ் சங்கமிருந்ததேல், அஃது இடைச்சங்கமாதல் வேண்டும்.

இலங்கையரசன் கயவாகுவும் பாவலர்கள் இளங்கோவடிகளும் சீத்தலைச்சாத்தனாரும் வசித்தகாலத்தி லிருந்த கரிகாற்சோழன் ஆலாசியமான்மியத்தின்படி பாண்டியன் குலசேகரன் முதலாமவனினின்றும் எட்டாவது அரசிளங்குமரனாகிய இராசசேகரபாண்டியன்காலத் திருந்தனனென்பவாதலின் அவர் குலசேகரபாண்டியனினின்றும் நாற்பத்தாறாமவனாகிய வமிசசேகரபாண்டியற்கு முப்பத்தெட்டுத் தலைமுறைமுன்னர் அரசாண்டிருத்தல் வேண்டும். பண்டிதர் பலருங் கொள்ளுமாறு ஆலாசியமான்மியத்திற்கூறிய பாண்டிய வமிசாவளியை மெய்யெனக் கொண்டக்கால் * கடைச்சங்கந் தோன்றுதற்கு 38 தலைமுறைமுன்னரே, அஃதாவது ஒரு தலைமுறைக்கு இருபதுவருடங்கள் விழுக்காடு கணக்கிட்டுப் பார்க்குமிடத்து 760-வருடங்கட்கு முன்னரே சிலப்பதிகாரமும் மணிமேகலையும் யாக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனல் பெறுதும். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் யாக்கப்படுதற்குப் பல்லாண்டுகள் முன்னரே—குறைந்தபட்சம் அவற்றிற்கு ஒரு நூற்றாண்டு முன்னரேனும்—திருவள்ளுவராற் குறள் எழுதப்பட்டிருத்தல வேண்டும்.

மேற்கூறிய இரு காவியங்கட்குங் குறள் முற்பட்டதென்பது, மணிமேகலையின்கட் குறள்மேற்கொள்ளப் பெற்றமையாற் போதரும். பின்வரும் பகுதியின்கண் அம்மேற்கோளினைக் காண்க :—

" நீகே ளென்றே நேரிழைக் குரைக்குந்
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுமவள
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை கேளாய்."

இப்பகுதியின்கட் சிறிது வேறுபாட்டுடன் மேற்கோ

* ஆராய்ச்சி செய்தலும வாதித்தலுங் கருதி இந்நூலினை மெய்ம்மையுந் தவறுவியல்பு முடைத்தென ஒருவாறு கொண்டனமேயன்றி, வேறன்று ; இதுபற்றிப் போந்த முடிவுகள், பின்னர்ப் புதுவிஷயங்களுங் கொள்கைகளும் நேர்ந்துழி மாற்றப்படினும் படலாம்.

ள்ளப்பெற்ற குறள், திருக்குறள் ஆறாவது அதிகாரத்தின் ஐந்தாவது பாடலாம்; அது வருமாறு :—

“தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.”

யாம் மேற்கூறியவற்றினானே கடைச்சங்கந் தோன்றுதற்குப் பல நூற்றாண்டுகண் முன்னரே, அஃதாவது ஏறக்குறைய கி. பி. இரண்டாவது நூற்றாண்டிற் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் முறையே யாக்கப்பட்டுளவென்றும், இவ்விரு காப்பியங்களுந் தோன்றுதற்குக் குறைந்தபட்சம் ஒருநூற்றாண்டு முன்னர்த் திருவள்ளுவர் திருக்குறள் செய்தனரென்றும் அறிகின்றாம்; எனவே, திருக்குறளின் காலம் கி. பி. முதனூற்றாண்டென்பது பெற்றாம்.

மேற்போந்த வாதத்தினாற் சில தமிழ்ப்பண்டிதர்கள் திருவள்ளுவரது திருக்குறள் காரணமாகக் கடைச்சங்கம் அழிவுற்றதெனக் கூறுங் கூற்றும் அவர்தங்கொள்கையும் பயமிலவா யொழிதலேயன்றி முன்னரே யாம்போந்த எதிர்மறைமுடிவினை வலியுறுத்துமாறு காண்க.

அன்றியும், அது ‘கடைச்சங்கப் புலவரனைவரும் ஒரே காலத்தினரேயோ?’ என்ற இரண்டாவது வினாவை விடுப்பதற்கும் ஒருதுணைக்கருவியாயுளது. சிலப்பதிகார மணிமேகலைக் காப்பியங்களின் உற்பத்தியைப்பற்றி யாம் மேற்காட்டியவற்றிற்றானே, சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரு ளொருவரும், திருக்குறளைப் புகழ்ந்து ஆசுகவிபாடியவருமாகிய சீத்தலைச்சாத்தனார் கடைச்சங்கத்திற்குப் பல நூற்றாண்டுகண் முன்னரே வசித்தனரென்பதூஉம், எனவே அவர் கடைச்சங்கப்புலவரு ளொருவராயிருத்தல் அசம்பாவிதமா மென்பதூஉம் அறிகின்றாம். திருவள்ளுவமாலையின்படி கடைச்சங்கப் புலவருளொருவராய மருத்துவன் றாமோதரனார் திருக்குறளின் சிறப்பினை யெடுத்துரைத்துள பாயிரச் செய்யுளின்கட்

சித்தலைச்சாத்தனாரைப்பற்றிக் குறிப்பித்துளர்; பின்வருமாறு:—

“ஒத்திரீர்க் கண்டங் கெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைகுத்தில்—சாந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.”

இப்பாடலினாற் சீத்தலைச்சாத்தனார் மிக்கநுட்சும மான ஆராய்ச்சிக்கா ரெனவும், அதுபற்றித் தமிழ்நூ லொவ்வொன்றனையுங் குறைகூறினரெனவும், அத்தகைய சுவையற்றனவும் பிழை பொதுளியனவுமான நூல்களை அடிக்கடி படித்தலாற் றலைநோவுடையராயினரெனவும், குறளினைக்காணப்பெற்றபின்னர் அவர் அந்நோவி னீங் கப்பெற்றனரெனவும் யா முணர்கின்றோம்; இதனானே யாம் சீத்தலைச்சாத்தனாரும் மருத்துவன் றாமோதரனா ரும் ஏககாலத்தினரெனத் துணித லியலும்.

ஆகவே, கடைச்சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர் என்ற அந்த மொத்தத்தொகையினின்றும் இரண்டுபுல வர்களைக் கழித்து நாற்பத்தேழிற்குக் குறைத்துவிடுதல் இன்றியமையாததாகின்றது; இனிப் பின்னர்க்கிளைக்கு ம் ஆராய்ச்சிகளினால் ஒருவேளை அத்தொகை இன்னுங் குறைக்கப்பெற்றுச் சங்கப்புலவர்குழாத்தினது மெய்ம் மைக்கு ஓரிடையூறாய் முடியினும் முடியும்.

இன்னும் ஆலாசியமான்மியத்தின்கட் கூறியபடி, கடை ச்சங்கப்புலவர்கள்யாவரும் வாணிதேவியின் அவதாரா ம்சர்கள் * என்று கூறப்பட்டும் அதுபற்றி ஒரேகாலத்தி

ங்கிய சேக ரன்சோல் வாழுநாண் மேலோர் வைகற்
கங்கையந் துறைசூழ் கன்னிக் கடிமதிற் காசி தன்னிற்
டங்கய முளர்ப யுத்தேள் பத்தவாம் பரிமா வேள்விப்
புங்கவர் மகிழ்ச்சி தூங்க மறைவழி போற்றிச் செய்தான்.

கிரப்பிய வழிநா ணன்னீ ராடுவா னீண்ட வீணை
நரப்பிசை வாணி சாவித் திரியெனு நங்கை வேத
வரப்பிசை மனுவாங் காயத் திரியெனு மடவா ரோடும்
டரப்பிசைக் கங்கை நோக்கிப் படருவான் படரு பெல்லை.

னரெனக் கொள்ளப்பட்டி ருந்தபோதிலும், அவர்தமுடனில்லோர் வெவ்வேறரசர்களது காலங்களிற் கூறப்படுகின்றனரென்பதுங் காண்கின்றும்.

இவ்வாறே நக்கீரருங் கபிலரும் பாணரும் குலசேகர பாண்டியனினின்றும் 46, 47-ஆம் அரசர்களாகிய வமிச சேகரனும் அவன்மகன் வமிசசூடாமணியுமாகிய இவர்களது அரசாட்சிகளைப்பற்றிக் கூறும் படலங்களிற் கூறப்படுகின்றனர்.

நாணவார் குழலி னாரம் மூவரி னவின் செல்வி
வாணவா றியங்கும் விஞ்சை மாதரா ளொருத்தி பாலிங்
கானவா றுளமை போகங்கி னைறனள் கமல போனி
பாணவா றறிவ னேகி யக்நகரக் கரையைச் சேர்ந்தான்.

நாமகள் வரவு தாழ்ப்ப நங்கைய ரிருவ ரோடுந்
தாமரைக் கிழவன் மூழ்கித் தடங்கரை யேறு மெல்லைப்
பாமகள் குறுகி யென்னை யன்றிநீ படிந்த வாறென்
னூமென வெகுண்டாள் கேட்ட வம்புயத் தண்ணல் சொல்வான்.

குற்றமின் றமல தாக நம்மைநீ கோபங் கொள்வ
தெற்றெனை விளைய திங்கை யெண்ணறு மாக்க டோற்ற
முற்றனை யொழிந்தி யென்று வுரைத்தனன் சாப மேற்கும்
பொற்றொடி மடந்தை யஞ்சிப் புலம்புகொண் டலமை பூண்டாள்.

ஊனிட்ட கன்றே யுன்று ருயிர்க்கணே யாவே னிந்த
மானிட யோனிப் பட்டு மயங்குகோ மென்ன வண்டு
தேனிடை யழுந்தி வேதஞ் செப்பும்வெண் கமலச் செல்வி
தானிட ரகல நோக்கிச் சதுமுகத் தலைவ னாற்றும்

மூகிழ்தரு மூலையின் மெய்யா முதலெழுத் தைம்பத் தொன்றிற்
றிகழ்தரும ஆகா ராதி ஹாகார மீறச் செப்பிய
புகழ்தரு நாற்பத் தெட்டு நாற்பத்தெண் புலவ ராகி
யகழ்தரு கடல்சூழ் ஞாலத் தவதரித் திடுவ வாக.

அத்தகு வருண மெல்லா மேறிநின் றவற்ற வற்றின்
மெய்த்தகு தன்மை யெய்தி வேறுவே றியக்கந் தோன்ற
வுய்த்திடும் அகாரத் திற்கு முதன்மையா யொழுகு நாதர்
முத்தமி ழால வாயெம் முதல்வரம் முறையா மன்றே.

தாமொரு புலவ ராகித் திருவுருத் தரித்துச் சங்க
மாமணிப் பீடத் தேறி வைகியே நாற்பத் தொன்ப
தாமவ ராகி யுண்ணின் றவரவர்க் கறிவு தோற்றி
யேமுறப் புலமை காப்பா னென்றனன் கமலப் புத்தேள்.

அக்கர நாற்பத் தெட்டு மவ்வழி வேறு வேறு
மக்களாய்ப் பிறந்து பன்மாண் கலைகளின் வகைமை தேர்ந்து
தொக்கவா ரியமு மேனைச் சொற்பதி னெட்டு மாய்ந்து
தக்கதென் கலைதண் டேர்ச்சிப் புலமையிற் றலைமை சார்ந்தார்."

குலசேகரனினின்றும் 60, 61-ஆம் அரசர்களாகிய குலேசவரிமர்த்தனபாண்டியர்களது அரசாட்சிக் காலத்தில் இடைக்காடர் வரவு கூறப்பட்டுளது. இக்கூற்றுக்களினுனே யாந்துணியத்தக்கன, நக்கீரரும் வமிசசேகரனும் அவன்மகன் வமிச சூடாமணியும ஒரேகாலத்தின ரென்பதூஉம், இடைக்காடரும் குலேசனும் அவன்மகன் அரிமர்த்தனனும் ஒரேகாலத்தின ரென்பதூஉமாம்; ஆகவே, நக்கீரர் கபிலர் பரணரென்னும் முப்புலவர்களும் இடைக்காடரும் 13 தலைமுறைகளின் காலவிடையீட்டினுற் பிரிக்கப்பட்ட வெவ்வேறு காலங்களிலிருந்திருத்தல்வேண்டுமென்று யாங் கூறிமுடிக்கலாம்; இந்நால்வரு மேககாலத்தினரெனக் கூறுதல் அசங்கதமாம்; அற்றன்று: அவர் நால்வரு மோரேகாலத்தினரேயெனக் கூறப்புகின், 61-ஆம் அரசனாகிய அரிமர்த்தனபாண்டியன் காலத்திற் சிறந்து விளங்கிய மாணிக்கவாசகரும், அவ்வமிசாவளியில் 72-ஆம் அரசனாகிய கூன்பாண்டியன் காலத்தின் மேம்பட்டுமிளிர்ந்த திருஞானசம்பந்தரும் ஒரேகாலத்தினரெனக் கூறுதல் இக்கூற்றினுஞ் சிறிது நேரிதாகலாம்; ஆயின், இது கர்ணபரம்பரையொடும் பண்டிதர்களது கொள்கைகளொடும் முரணுநிற்கும். ஈண்டுக்கூறியவற்றினல் இடைக்காடர்க்கு வெகுகாலம் முன்னரே நக்கீரகபிலபரணர்களிருந்தனரெனவும், எனவே யந்நால்வரு மேககாலத்தினரல்லரெனவும் யாங் கூறிமுடித்தல் வேண்டும்.

இவ்வாறு கடைச்சங்கங்கூடிய புலவருட் பல்லோர் வெவ்வேறு காலங்களில் விளங்கினரெனல் காட்டப்படிற் சங்கமென்பது தனது மெய்ச்சரிதவிய விழந்து பொய்க்கதையி னியலுடைத்தாய்விடும்.

இனி அடுத்ததாக யாம் ஆராயப்புகவேண்டுவது, பல தமிழ்ப்பண்டிதர்களுங் கூறுமாறு, சில்லரசர்களைச் சிறப்பித்து முழுநூல்களுந் தனிப்பாக்களுஞ் செய்த புலவர்

கள் அவ்வவ்வரசர்கள் காலத்தினரேயோ வென்பதாம். ஒவ்வொருவிஷயத்திலும் அவர்தம் அபிப்பிராயங்களை அவ்வவ்வாறே யொத்துக்கொடலியலாதென யாம் நினைத்தற்கிடனுண்டு. இப்போது யாங்கூறிய கூற்றிற்கு ஆதாரமாக, அவர்களபிப்பிராயம் முற்றுந்தவறெனக் காட்டத் தக்கதோ ருதாரண மெடுத்துக் காட்டுகின்றோம். யாம் முற்கூறியாங்குக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கரிகாற் சோழனையுந் தொண்டைமா னிளந்திரையனையும் முறையே புகழ்ந்துபாடிய பட்டினப்பாலையும் பெரும்பாணாற்றுப்படையுமாகிய விருநூல்களும் யாத்தனரென்ப.

முன்னோர் சொல்லியபடி குலோத்துங்க சோழன் கி. பி. 1064-முதல் 1113-காறும் அரசாண்டனன்; ஆகவே, அவன்மகன் தொண்டைமான் அவன்காலத்திற் சிறிதிருந்திருத்தல் கூடுமெனினும் தொண்டைமானது பின்சந்ததியார் மிகப்பிற்பட்டகாலத்தி லிருந்திருத்தல் வேண்டும். சிலாசாதனவாராய்ச்சியினா லேற்படுத்தப்பட்ட சோழவமிசாவளியி னொருபகுதியின்படி (அவைதம்முட் கடைசியாகத் தோன்றியது தென்னிந்திய சிலாசாதனவாராய்ச்சி, சம்புடம் IV, பக்கம் 205-இன்க ளுள்ளது) கரிகாலன் முதலாமவன்குலோத்துங்கனுக்கு வெகுதூரம் பேலே நிற்கின்றான். பின்வருவது அவ்வமிசாவளியினின்று மெடுத்துக்கூறப்படுவது :

கி. பி. 890. விசயாலயன்.
910. ஆதித்திய சோழன், முன்னையோன்மகன்.
935. பராந்தக சோழன், முன்னையோன்மகன்.
955. இராசாதித்தியன், முன்னையோன்மகன்.
970. கந்தராதித்தியன், முன்னையோனிளவல்.
985. அரிஞ்சய சோழன், முன்னையோனிளவல்.
995. பராந்தகன், முன்னையோன்மகன்.
1015. மதுராந்தக சோழன், கந்தராதித்தியன்மகன்.
1064. குலோத்துங்கன் I (முதலாமவன்.)

கரிகாலன் முதலாமவன் கோச்செங்கண்ணனது மூதாதைகளு ளொருவனெனவும், கோச்செங்கண்ணனது வழித்தோன்றல்களு ளொருவன் * கோக்கிளிஸ்ரீபதி யெனவும், மேற்காட்டிய வமிசாவளியி லுச்சியிற் காட்டப்பட்ட விசயாலயன் கொக்கிளி ஸ்ரீபதியின் வழித்தோன்றல்களுளொருவனெனவுங் கூறுப. இதனானே, குலோத்துங்க சோழற்குப் பலநூற்றாண்டுகண் முன்னரே கரிகாலன் முதலாமவ னிருந்தன னென்பது தெள்ளிதிற்றுணியப்படும். இத்துணிவு யாம் கரிகாலனுக்கு மேற்கட்டிய காலவரையறையினால் அஃதாவது கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்பதனால் வலியுறுவதாயிற்று. ஆகவே, கரிகாலன் முதலாமவனுக்கும் குலோத்துங்கசோழன் மகன் தொண்டைமானது வழித்தோன்றல்களுளொருவனாகிய தொண்டைமா னிளந்திரையனுக்கும் இடையிலுள்ள காலவளவு, குலோத்துங்கனுக்குங் கரிகாலன் முதலாமவனுக்கும் இடையிலுள்ளகாலவளவினும் மிக்கிருத்தல்வேண்டும். இவ்வாதம், 'கரிகாற் சோழனையுந் தொண்டைமா னிளந்திரையனையும் பற்றி முறையே சிறப்பித்துப் பட்டினப்பாலையும் பெரும்பாணாற்றுப்படையும் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் அவ்வரசர்களது காலத்தி லிருந்தவரேயோ? எனவே அவ்விராசரு மேககாலத்தினரேயோ'? என்னும் இப்போதாராய்ச்சியின்க ணுள்ள வினாவினை விடுப்பதற்குப் பேருதவியாயிருக்கின்றது. கரிகாலன் முதலாமவனுக்குப் பலநூற்றாண்டுகள் பிற்பட்டவனாகலானும், தொண்டைமா னிளந்திரையனென்பான் குலோத்துங்கனது மரபிலுதித்தோரு ளொருவனாகலானும், கரிகாலன் முதலாமவனையுந் தொண்டைமா னிளந்திரையனையும் புகழ்ந்து நூல்செய்த கடியலூர் உருத்திரங் கண்ண

கொக்கிளி' யென்பது 'கோக்கிள்ளி' யென்னுந் தமிழ்ப்பெயர் மரூஉப்போலும்.

ஞர் என்னும் புலவர்பெயர் ஒரேபுலவரது பெயராகு
மேல், அப்புலவர் இவ்வரசர்களது காலத்திலும் இருந்
திருத்த லியலாதென்பது.

யாம் இதுகாறும் வடமதுரை தென்மதுரைகளினுங்
கபாடபுரத்திலும் நிகழ்ந்தனவாகக் கூறப்படும் மூன்று
தமிழ்ச்சங்கங்களையும்பற்றிப் பொதுப்படக் கூறிப் பின்
னர்க் கடைச்சங்கத்தினைப்பற்றி விசேடமாய்க் கூறிப்
போந்தாம். அக்கடைச்சங்க விஷயமாக மூன்று ஆசங்
கைகள் எழுப்பி அவையிற்றினை யாராய்ந்தாம். அவை
யாவன :—முதலாவது குறள் காரணமாகச் சங்கம்
அழிவுற்றதோ வென்பதூஉம், இரண்டாவது - சங்கங்
கூடிய புலவர் நாற்பத்தொன்பதின்மரும் ஒரே காலத்தி
னரேயோ வென்பதூஉம், மூன்றாவது - சங்கச்செய்யுட்க
ளென் றெண்ணப்படுஞ் சேர சோழ பாண்டியர்களை
யும் அவர்தம் நாடுகளையும்பற்றிச் சிறப்பித்துப் பாடப்
பட்டுள்ள முழுநூல்களின் ஆசிரியர்களும், தனிப்பாக்க
ளின் ஆக்கியோரும், அவற்றைத் தொகுத்தோருமாகிய
அனைவரும் தாம்பாடிய அவ்வவ்வரசர்களது காலத்தி
லிருந்தவரேயோ வென்பதூஉமாம். இந்த மூன்றுஆசங்
கைகளுள் முதலிரண்டற்கும் முற்றிலும் எதிர்மறை
யாக விடைபகரவேண்டிற்று ; கடையொன்றற்குமட்டும்
பாதி மறையாகவும், பாதி விதியாகவும் விடுத்தனம்.

இனிச் சங்கமென்றொன்றிருந்ததோ வென்பதைப்
பற்றிச் சில பகர்வாம். கடைசியிற் பார்க்கப்போனாற்
சங்க நிகழ்ச்சியைப் பற்றிய யாவும் கற்பனாசாமர்த்தியங்
காரணமாக விளைந்த பொய்க்கதையாக் கழியினுங் கழி
யலாம். இத்தேசத்தின் வடபாகத்தில நவத்வீபம் அல்
லது நதீயம், காசி, காசமீரம் இன்னும் பிறவிடங்களி
லும் இருந்த கலாசாலைகள்போலப் பல கல்விபயிலிடங்க
ளிருந்தனவென்றும், அவ்விடங்களில் ஸம்ஸ்கிருத பா
ஷையிலுள்ள பலவிதமான கலைஞானங்களும் பயிலப்

பட்டுவந்தன வென்றும் நாம் அறிவோம். அக்கலா சாலைகளை மாதிரியாக வைத்துக்கொண்டு தமிழ்க்கவிஞர்களும் தங்களுடைய சங்கங்களைப் படைத்து அவைகளுக்கு மதுரையும் பிறவும் இடங்களாமெனவும் கற்பித்துக் கூறியிருத்தலும் கூடும். தொல்காப்பியம் முதலிய நூல்கள், தமிழ்வழங்கும் நாட்டினை, தமிழ் சுத்தரூபத்திற் பேசப்பட்டு வந்த செந்தமிழ் நாடென்றும், அவ்வாறு பேசப்படாது கலவை மொழி பயின்றுவரப்பட்ட கொடுந்தமிழ்நாடென்று மிருவகைப்படுத்துக் கூறும். சாதாரணமாய் யாவரும் பாண்டிநாடே செந்தமிழ்நாடென நம்பிவருகின்றனர். ஆயினும், செந்தமிழ்நாடு சோழமண்டலமேயென்பது சிலருடைய கொள்கை. இதுபோலவே சங்கமிருந்த இடத்தைப்பற்றியும அபிப்பிராய பேதங்கள் உள்ளன. யாப்பருங்கலக்காரிகையுரையில் மேற்கோளா யெடுத்துக்காட்டிய * ஒரு செய்யுளின்படி தமிழ்மொழி சுத்த ரூபத்திற் பேசப்பட்டு வந்தது சோழமண்டலத்திலேயே யென்பதும், முதற் சங்கம் கூடியதும அவ்விடத்திலேயே யென்பதும் வெளியாகின்றன. தமிழ்ச் சங்கங்கள் இருந்தவிடம் மதுவேயாயினுமாகுக. மேற்குறிக்கப்பட்ட ஆரிய கலாசாலைகளுக்கும தமிழ்ச் சங்கங்களுக்கும் வேற்றுமை பெரிது முண்டென்றுமட்டும் யாம் ஒருதலையாகச் சொல்லுவேம். கலாசாலைகளில் வேதம வியாகரணம் தருக்கம வேதாந்தம் மீமாஞ்சை முதலிய பல சாஸ்திரங்களும ஸம்ஸ்கிருத கலைஞானப் பகுப்புக்களாகிய ஆயுள்வேதம் வானசாஸ்திரம் முதலியனவும் பயிற்றப்பட்டுவந்தன. தமிழ்ச் சங்

‘மன்று வாணன் மலர்திரு வருளாற்
றென்றமிழ் மஞ்ஞை சிவணிய செய்த
வடியவர் கூட்டமு மாதிச் சங்கமும்
படியின் மாப்பெருமை யாவுஞ் சோழனுஞ்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கு
மையறு சோழ வளநா டென்ப."

சங்கங்களிலோ, பிரபந்தங்களியற்றுதற்கண்ணும் சேர சோழ பாண்டியர்கள்மீது விடுகவிகள் ஆசுகவிகளாய்ப் புனைதற்கண்ணும் தங்காலத்தினைப் போக்கித் தம்முடைய கல்விச் சாதுர்யமான வன்மையைப் பிரசித்தம் அவ்வரசர்களிடமிருந்து பரிசுகள் பெற்றுக்கொண்டுவந்த கவிஞர்கள் இருந்தார்கள்.

சங்கச் செய்யுளென்னும் பெயரினவாய்ப் பிரபலமான பூர்வீகமாக குறிப்புச் செய்யுளாற் கட்டப்பட்ட நூல்களின் றன்மையைப் பார்க்கப்புகின் ஓர் வழிப்பிராயம் வலியுறுகின்றது அன்றியும், தமிழ் நூல்கள் இயல் இசை நாடகமென்னும் மூன்று பிரிவினவாய் அடங்கும் இப்பாகுபாடு முறையால், தமிழ்ப் பாஷையினுடைய பெருமையை யா கவிஞர்களெல்லாம், தமிழ்க் கவியின் றன்மையைப் பயின்றுணரப்பட்டனவாம். தமிழ்ப் புலவர்களுக்குத் தக்க திருப்தி தந்தனவும் பதிப்பிற்பாலசேவை யென்றும் உத்தேசித்தற் கிடமுண்டு பொய்யுரை சேர்ப்பனவன்றி, இலக்கணம் நிகண்டு முதலியனவும் பிறந்தன ஆயினும், அவை தமிழ்ப்பயிலோர் சிறுபிராயத்திலேயே கற்றுக் கழித்து விடப்படுவன. *பலரால் பாடப்பட்ட செய்யுட் பிரபந்தங்களையும், பேர் குறித்த நூல்களையும் கிரமமாகக் கற்றுணர்ந்தவன் போதிய கல்வியறிவுள்ளவனென மதிக்கப்பட்டுத் தன் கல்விக்குத் தக்கபரிசு பெறும்பொருட்டு எந்த அரசனிடத்தும் செல்லவும் இடத்தும் போதற்குச் சித்தமாயுள்ளவனென்றெண்ணப்படுவான். உயர்ந்த கலைஞானங்களை அறிய விரும்பியவன் ஸம்ஸ்கிருத நூல்களைப் பயில்வான். புக்குத் தான்விரும்பிய வறிவினைப் பெறுவான்.

ஆதலான், தங்களை யாதரித்தோர்களைக் கவிகளாற் புகழ்ந்து அவர்களால் ஆதரிக்கப்பட்ட புலவர்களே சங்கங்களி லிருந்தனரென்றும், வடதேசத்து ஸம்ஸ்கிருத கலாசாலைகளைப் போன்றனவல்ல இச்சங்கங்களென்றும் நாம் எண்ணவேண்டி யிருக்கின்றது.

இனி இத்தமிழ்ச்சங்கத்திற்குத் தக்க வுதாரணமாக வடக்கின்கட் சங்கங்களுள் வேறு சிலவற்றைப் பார்ப்போம். தாராநகரத்தரசனாகிய போசனென்போன் வடமொழிப் பாவலர்களைப் பெரிதும் ஆதரித்தநிமித்தம் அவனைப் புகழ்ந்து வல்லாளசேனனென்னு மொருவராற் செய்யப்பட்ட போசப்பிரபந்தம் என்னும் பெயரியதோர் நூல் வடமொழியின்க ணுளது. அவ்வரசன் கி. பி. பதினோரா நூற்றாண்டின் மத்தியகாலத்திற் சிறந்துவிளங்கினன்; அந்நூல் அவ்வரசற்குச் சில நூற்றாண்டுகளின் பின்னர் எழுதப்பட்டது. அவ்வரசனது சரித்திரத்தைப் பற்றிய விஷயம் அதிகமாக வொன்றும் நமக்குத் தெரியாது: அவனைப்பற்றி யாம் அறிந்தனவெல்லாம் கல்வெட்டுக்களினின்றுஞ் சேகரித்தனவேயாம். ஆனால், இப்புலவர் தமது நூலின்கண் உபயோகப்படுத்தியுள முக்கியவிஷயங்க ளனைத்தும் சரித்திர சாதனங்களினின்று மெடுத்து ற்கொள்ளப்பெறாது தமது சொந்தவூகத்தினு லமைக்கப்பட்டனவேயாம். தென்னிந்தியாவின்கணிருந்த அரசர்களின் சமூகத்தை யடுத்திருந்த தமிழ்ப் புலவர்கள் செய்தனவாக எண்ணப்படுவனபோலவே, அவ்வரசனுக்கு வெகுகாலம் முன்னர்ப் பல்வேறு காலங்களினிருந்த பலபுலவர்களையும் ஒருங்குகூட்டி ஒருகாலத்தினராக வகுத்து அவர்தமை ஆசுகவியாக வடநூற்பாக்கள் புகலுமாறு புனைந்துரைத்துத் தமது காப்பியத்தலைவனைச்சுற்றிப் பொய்யான ஒளிவட்டமொன்று படைத் திட்டுக்கொண்டு கூறுநிற்பர். உதாரணமாக, போசராசனிருந்தகாலமென்று வழக்கமாகக் குறிக்க படுங் காலவரையறைக்கு முற்பட்டவருந் தனித்தனி வெவ்வேறு காலங்களிலிருந்தவருமாகிய காளிதாசன், பாரவி, மாகன், பவபூதி, பாணன், தண்டிமுதலாயினோரெலாம் அவ்வரசன தவைக்களத்தினை அலங்காரஞ்செய்தற்பொருட்டும், ஒருவரோடொருவர் முரணிப்போட்டி

யிட்டுத் தமது இறைவனை மகிழ்விக்கத்தக்க வடமொழிக் கவிகள் தக்கணமே சொல்லுதற்பொருட்டும் ஒரேகாலத் திலாக்கப்பட்டனர். இத்தகைய பொய்ம்மகிமையோ டும் விளங்காநின்ற இவ்வடநூற்புலவர்குழாம் நமது தமிழ்ச்சங்கத்திற்கு எவ்வாற்றானுந் தக்கவினையாம். நாற்பத்தொன்பது புலவர்களா னியன்று பாண்டியராசர்க ளாற் போற்றப்பெற்ற தமிழ்ச்சங்கம், காளிதாசாதி வடமொழிப் பாவலர்களானியன்று மிகப்போர்படைத்த போசராசனாற் போற்றப்பெற்ற சங்கத்தினைப் பெரிது மொக்குமாறு காண்க. இவ்விருசங்கங்களும் உண்மை யாகவே யிருந்த மக்களா னியன்றனவென் றெண்ணப் படுகின்றன. சிலர் காளிதாஸன் கி. மு. முதல் நூற் றாண்டிற் சிறந்துவிளங்கின னென்பார்; வேறு சிலர் கி. பி. மூன்றாம் நூற்றாண்டி லிருந்தன னென்பார்; இன்னுஞ் சிலர் கி. பி. ஆறாம் நூற்றாண்டி லிருந்தன னென்பார். பாணனது காலம் கி. பி. எழாம் நூற்றாண் டின் முற்பகுதியென்று நிலைநிறுத்தப்பட்டுளது. கி. பி. ஆறாம் நூற்றாண்டும் எட்டாம் நூற்றாண்டின் தொடக்க மும் முறையே தண்டி பவபூதிகளினது காலங்களெ னக் குறிக்கப்பட்டுள. பாரவி மாகன்காலத்திற்கு முன் னரே வாழ்ந்திருத்தல் வேண்டுமென்பது காணப்படு கின்றது. இவ்வாறே முற்பகுதிகளில் யாம் சீத்தலைச் சாத்தனாரும் மருத்துவன் றாமோதரனாரும் கரிகால கய வாகுகளினது காலத்தில் அஃதாவது கி. பி. இரண் டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தனர் எனவும், நக்கீர கபில பரணர்கள் வமிசசேகரபாண்டியன் காலத்தும் அவன்மகன் வமிசசூடாமணிகாலத்தும் வாழ்ந்திருந் தன ரெனவும், இடைக்காடர் பாண்டியகுலேசனது காலத்தும் அவன் மகன் அரிமர்த்தனனது காலத்தும் வாழ்ந்திருந்தனரெனவும் காட்டியிருக்கின்றாம். இவ் வாறு வெவ்வேறு காலங்களில் வாழ்ந்திருந்த இப்புலவர்

கள் ஒருங்கு கூட்டப்பட்டுத் தமக்கு முன்னேயாதல் பின்னேயாதல் பிறந்து விளங்கிய அரசர்களது காலத்தில் இருந்தவராக்கப்படுகின்றனர்.

இவ்வாறு பாவலர் சங்கமிரீஇயினன் போசராச னொருவனேயன்றி யாம் விக்கிரமசாகை யெனச சகாப்தம் கணக்கிடீஉம் விக்கிரமாதித்தியராசனும் பிறகூறப்படும் நவரத்தின மனைய பெயர்பெற்ற மகான்களை ஆதரித்தனன் எனவுங் கூறுப:—தந்வந்திரி, க்ஷபணகன், அமரஸிம்மன், சங்கு, வேதாளபட்டன், கடகற்பரன், காளிதாஸன், வராகமிகிரன், வரருசி.

தமிழ்ச்சங்கங்களையும் போசராசனதவைக்களத்தே வாழ்ந்திருந்தனரெனக் கூறப்படும் வடமொழிப்புலவர் குழாங்களையும் ஒப்பிட்டு யாம் செய்த ஆராய்ச்சி தமிழ்ப்புலவர்கள் வடதிசையாள ரிடத்திருந்தே சங்கங்களைப் பற்றிய கருத்துக்களை மேற்கொண்டனரென்றெண்ணுமாறு நம்மைத் தூண்டாநின்றது. எனினும், சங்கத்தைப்பற்றிய வெண்ணம் இன்ன காலத்திலேயே முதன் முதல் தமிழ்ப்புலவரது மனத்தில் உதித்ததென்று வரைந்து சுட்டுத லரிதாகின்றது.

மேற்போந்த தமிழ்ச் சங்கத்திற்குப் பல விடயங்களினும் இணையானதும், அஃது அங்குரித்தற்கேற்ற மூலமெனக் கோடற்குத் தக்கதுமான வேறு சங்கமொன்று எடுத்துக்கூறுகின்றாம். படைத்திட்டுக்கொண்ட சில செய்திகளொடு கூடிக்கிடந்த அம்மூலமே பின்னர் எதையு மெளிதாக நம்பி விடாபபிடியாக்கொள்ளு மியல்புடைய இந்திய பண்டிதர்களால் அத்தகைய பெரிய தமிழ்ச்சங்கமாக ஓங்கி வளர்ந்திருக்கலாம்.

திகம்பரதரிசனமென்னு மொரு சைனசமய நூலின்கண் விக்கிரமசகம் 526 இல், அஃதாவது கி. பி. 470-ஆம் ஆண்டிற் பூஜ்யபாதர் என்போரது மாணுக்க

ருனொருவராய !வச்சிரநந்தியென்பவரால் தென்மது ரையில் ஒரு திராவிடசங்கங் கூட்டப்பட்டதென்று கூறப்பட்டுளது. (மும்பாபுரி யரசாங்கத்து ஆசியா சங்க பத்திரிகை, சம்புடம் XVII, புத்தகம் 44, 74-ஆம் பக்கம் பார்க்க.) இச்சங்கமானது தெற்கே போந்து தங்கள் சமயக்கோள்களைத் தாபித்தற்பொருட்டு முயன்று நின்ற திகம்பர சைனர்களது கூட்டமாயிருந்தது. தமிழினும் வடமொழியினும் வல்லுநராயிருந்த பலசமயாசாரியர்கள் அதன் அவயவிகளா யிருந்திருத்தல்வேண்டும். மேற்கூறிய கூட்டத்தின் காலமும் வமிசசேகர பாண்டியன தரசாட்சி விஷயமாக வில்ஸன் துரை குறித்தகாலமும் ஏறக்குறைய வொன்றுகின்றன ; அஃதாவது, கி. பி. ஐந்தாவது அல்லது ஆறாவது நூற்றாண்டாம். யாம் அவரது மக்கன்ஜீ சேகரங்களின் விரித்துரைபட்டியின் 46—47 ஆம் பக்கங்களினின்றும் ஒரு பகுதியை யெடுத்துரைக்கின்றோம். அது வருமாறு :—

"வரகுண பாண்டியன தரசாட்சிக்குச் சிறிது பின்னர் 24 அல்லது 25 அரசிளங்குமரவரிசை காணப்படுள ; அவர்கட்குப் பின்னர் ஒரு புதியவமிசத்திற்கு ஆதிகூடஸ்தனைத் தோன்றும் வமிசசேகரபாண்டியன் அரசுரிமை யெய்துகின்றனன். மதுரையின்கட் கோட்டையும் அரண்மனையுங் கட்டினமையும் பழைய நகரத்தினைப் புதுப்பித்தமையுமாகிய இவையிற்றை யிவ்வரசனே செய்தனனெனக் கூறுதற்கட் பஃறிறப்பட்ட சரிதைகளு மிணங்குகின்றன. பலரும் ஐயுறுமாறு நகரைப் புதுப்பித்தலென்பதற்கு யாம் புதிது உண்டாக்கப்பட்டதெனப் பொருள் கொள்வேமேல் இவ்வரசிளங்குமரன் கிறிஸ்து பிறக்குமுன்ன ரிருந்திருத்தல்வேண்டு மென்பது போதரும் ; ஆனால், இது வரகுணபாண்டியனுக்கிட்ட காலவளவினொடும் மற்றைய வரசிளங்குமரர்தங் கால வளவினொடும் முரணுமாறு காண்க. இவ்வமிசத்தி

னிறுதிக்கட் கூறப்படுங் கூன்பாண்டியனினின்றும் மேலே கணக்கிட்டுக்கொண்டு செல்லுமேல் வமிசசேகரபாண்டியனைக் கி. பி. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டில் வைக்குமாறு நேரிடும்.”

தட்சிணதேசத்தில் உள்ள மதுரையின்கண் திகம்பரசைனர்களா லேற்படுத்தப்பெற்ற திராவிட சங்கத்தின் காலமும் மூன்றாந்தமிழ்ச்சங்க மேற்பட்டதாகக் கூறுங் காலமு மொன்று மாற்றினைக் கூர்ந்து ஆலோசிக்குமிடத்துப்*பின்னர்க் கூறியது ஒருவேளை திகம்பரசைனர்களது சமயக்குழாத்தினையே இந்துக்கள் தங்கள் மதக்கொளிற் கேற்றவாறு மாற்றிச் சொல்லிக்கொண்டனரோ வென்றையுறற் கிடனுளது; இஃதுண்மையென்றேற்படில் இது மிகவு முக்கியமான விஷயமாதலேயன்றி மதுரையிற் சைனர்கூட்ட மேற்பட்ட காலமே தமிழ்க்கவிசரிதத்தைப்பற்றி யெழுதுதற்கேற்ற வுறுதியான வாரம்பமாகு மென்க.

இக்கொள்கைக்கநுகூலமாகத் திருக்குறளுஞ் சிலப்பதிகார மணிமேகலைகளும் யாக்கப்பட்ட காலங்களைப் பற்றி யாம் முன்னரே யெய்திய முடிவுகளை யெடுத்து வைக்கலாம். அவையாவன—பிற்கூறிய விருநூல்களும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற் செழித்தோங்கிய கரிகாற்சோழன் முதலாமவன்காலத்து யாக்கப்பட்டனவென்பதும், மணிமேகலையினுண்மேற்கொள்ளப்பெற்ற திருக்குறள் கி. பி. முதனூற்றாண்டில் யாக்கப்பட்டதென்பதுமேயாம். மூன்றுஞ்சங்க மேற்பட்ட காலத்து அரசாட்சி செய்தவனாகிய வமிசசேகரபாண்டியன் காலத்தினராய நக்கீரர் அச்சங்கத்தின்கண் முதற்புலவரா யிருந்திருக்க வேண்டும். அவர்தாங் கண்டருளிய இறையனாரகப்பொருளுரையிற் சிலப்பதிகாரச் செய்யுட்களிற் சிலவற்றை யெடுத்துக்காட்டுவதனானே, நக்கீரர் களவியற் பொருள் காண்டற்குச் சிலகாலம் முன்னரே சிலப்பதிகார மியற்

றப்பட்டிருத்தல் வேண்டும். இவ்விடயமானது முற்பக்கங்களிற் குறிப்பிக்கப்படாது போயினமையின் அது சிலப்பதிகாரமும் அதன்றொடர்ச்சியாகிய மணிமேகலையும் நக்கீரரது இறையனாரகப்பொருளுரைக்கு முற்பட்டனவெனக் காட்டுதல் கருதி யீண்டெடுத்துக் கூறப்பட்டது.

தமிழிலக்கியங்களிற் சமய நூல்கள் மற்றையவற்றினும் மிகச்சிறப்புடையவாம், அன்றியும், அவை வடமொழிச் சமய நூல்களினும் அதிகமாகக் கவனிக்கற்பாலவாம். வேதங்களும் ஸ்மிருதிகளும் புராணங்களும் ஆகமங்களும் இந்துமத முழுதிற்கும முதற்பகுதியாகா நிற்பப் பிற்பகுதியானது தென்னிந்தியாவின்கண் நிகழாநின்ற வழக்கவொழுக்க சமயங்களினிடத்துத் தமிழிலக்கியங்களில் ஆங்காங்குச் செறிந்து காணப்படுகின்றது. வைதிக கிரியைகளினும் மற்றைய கிரியைகளினும் வேதகானஞ்செய்யப்படுதல்போலவே தென்னிந்தியாவிற் பலவகைப்பட்ட மதக்கிரியைகளினும் தேவாரத்திருப்பதிகங்களும் நாலாயிரப்பிரபந்தப்பாடல்களும் பாடப்படுகின்றன. இக்கிரியைகள் முதன்முதலில் தென்னிந்தியாவிலுண்டாய்ப் பின்னர் எந்தவுருவிலாவது இந்தியாமுழுவதும் பரவிவிட்டன. தென்னாடுகளில் விசேடமாய்க் காணப்படுஞ் சைவவைணவசமயங்கள் வடமொழியை யறவே நீத்துவிட்டுத் தமிழ்மொழியி னுணர்ச்சிமட்டிலேயே திருத்தியடைவனவாம். ஆகவே, தமிழிலக்கியத்திற் சமயப்பகுதியைப்பற்றிச சரித்திரரீதியாகச் செவ்வனே யாராய்ச்சிசெய்தல் தமிழ்பயிலுவோர்க்குப் பெரிதும் பயன்படும்; சமயநூல்களை யேற்படுத்தியவாகக் கூறப்படுஞ் சமயாசாரியர்தஞ் சரிதங்களையுங் காலவரையறையினையும் அறிவுறுத்தப் போதுமான விடயங்களை அவர்க்கு அளிக்குமென்பதற்கு ஐயமின்று. மேலுஞ் சமயம் ஆதியில் உற்பவித்ததற்குக் காரணமாயிருந்த சாதனங்களை யறி

பத்தக்க நிலைமையிலிருப்பதுடன், காலக்கிரமத்தில் அஃ தடைந்த வேறுபாடுகளையுஞ் சீர்திருத்தங்களையும் படிப் படியாய் வளர்ந்து தற்கால நிலைமையையடைந்த வழியை யும்இனிது தெரிக்குந் தன்மையுடையாராவோம் இன்னும் பிறர்கொண்ட தவறானவெண்ணங்களையும் பிசகியகோட் பாடுகளையும் மாற்றித் தோம்பலபொருந்தப் பாரித்து ரைக்குங் கட்டுரையினைத் தெளிந்துப் புராணப்பொய்க் கதைகளினுட் பொதிந்துகிடக்கும் உண்மையினைக் கொ ழித்துப் பிரித்தெடுக்கும் ஆற்றலுமுடையாராவோம்.தமி ழிலக்கியத்தின் சமயபகுதியினை அதிநுட்பமாயுஞ் சரி த்திரரீதியாயு மாராய்வதனாலே போதரும் பெரும்பயன் அளவிலவென்பதை சிற்சில உதாரணமுகத்தானே விளக்குதும்.

ஒவ்வொரு வைணவாலயத்துள்ளும், திருமால் இலக் குமி இன்னும பலதேவர்கள் முதலிய யாவரோடும் ஒருங்கு வைத்துப் பூசிக்கப் பெறும் ஸ்ரீவைணவசமயகுர வராம் பன்னிராழ்வார்களின் காலவரையறையினைப் பற்றி ஒருவாறு பேசப் புகுவாம். அவ்வாழ்வார்கள் தம்பெயரினையும் அவர்கள் பிறந்த ஆண்டினைக் குறிக் கப்படுங் காலத்தினையும் அடியிற் காண்க.

1. பொய்கையாழ்வார்: துவாபரயுகம்; 862902-ஆம் ஆண்டு. அஃதாவது 6091 வருடங்களு க்கு முன்பு அல்லது கி. மு. 4201.
2. பூதத்தாழ்வார்: அவ்வாண்டே.
3. பேயாழ்வார்: அவ்வாண்டே.
4. திருமழிசையாழ்வார்: அவ்வாண்டே.
5. நம்மாழ்வார்: கலியுகந் தோன்றிய 43-ஆம் நாள்; அஃதாவது - கி. மு. 3101.
6. மதுரகவியாழ்வார்: துவாபரயுகம் 863879-ஆம் ஆண்டு; அஃதாவது-கி. மு. 3224.

7. குலசேகராழ்வார் : கலியுகம் 28-ஆம் ஆண்டு ; அஃதாவது-கி. மு. 3075.

8. பெரியாழ்வார் : கலியுகம் 47-ஆம் ஆண்டு ; அஃதாவது-கி. மு. 3056.

9. சோதை (ஆண்டாள்) : கலியுகம் 98 - ஆம் ஆண்டு ; அஃதாவது-கி. மு. 3005.

10. தொண்டரடிப்பொடியாழ்வார் : கலியுகம் 289 ஆம் ஆண்டு ; அஃதாவது-கி. மு. 2814.

11. திருப்பாணாழ்வார் : கலியுகம் 343 ; அஃதாவது-கி. மு. 2760.

12. திருமங்கையாழ்வார் : கலியுகம் 398 ; அஃதாவது-கி. மு. 2705.

மேற்குறித்த ஆழ்வார்களின் காலவரையறை அதிசயிக்கத்தக்கவாறு பாரித்துரைக்குங் கட்டுரைபற்றிவந்த பெற்றியதேயா மாகலிற் சிறிதும் உண்மையெனக் கோடற்பாலதன்று. மேற்குறித்தாங்குக் கூறுவார்தங் கூற்று எட்டுணையும் நிலைபெறாதென்பது பின்னரி யாங் கூறுவதனுனே இனிதுவிளங்கும் இவ்வாசிரியர்களா லெழுதப் பெற்ற நூல்களின் நடையினையும் உட்பொதிந்த பொருளினையும் ஆங்காங்கு எடுத்துக்கொண்ட மேற்கோள்களையுஞ் சரிதங்களையுஞ் சிறிது உற்று நோக்கின் அஃது அவர்தங் கூற்றுப் பொய்யெனத்தக்க சான்று பகரும். நாலாயிரப்பிரபந்தத்தினையும் யாம் மேற்குறித்த பத்துப்பாட்டு (பத்துச் செய்யுள்களான் முடிந்தது), அகநானூறு, புறநானூறு, கலித்தொகை யாதிய பிரபந்தங்களையும் யாவரேனுமொருவர் செய்யுணடை பாஷைநடைகளைப்பற்றி நன்கறிவான் சீர்தூக்கிச் செவ்வனே ஆராயப்புக்குழி, வைணவர்களின் தோத்திரரூபமா யுள்ள பாடல்களனைத்தும் பொதுவிற் புதியனவாகவே காணப்படுகின்றன வென்றும், சங்கத்துப் புலவர்களெனக் கூறப்படும் பத்துப்பட்டாதியநூல்களின்ஆசிரியர்தஞ்

செய்யுட்கள் பழைய சொற்களும் சொற்றொடர்களும் நிரம்பப்பெற்றுள்ளனவென்றும் உணராதிரார். நாலாயிரப்பிரபந்தத்தின் பாஷைநடை, செய்யுணடை, சொற்றொடர்ப்பொலிவு முதலியவற்றினைப்பற்றி யாம் கூறுவதைச் சித்தாந்தப்படுத்தவேண்டியவிட னிஃதன்று. மேற்குறித்த தோத்திரப்பாக்கள் யாக்கப்படுங்காலத்திலோ அன்றி அவைகட்கு முந்தியோ இருந்தவர்களாயும் மேற்கூறிய நூல்களில் ஆங்காங்குக் கூறப்பட்டவர்களாயுமுள்ள மன்னர் குறுநிலமன்னராகியவர்களின் சரிதையைக் கூறப் புகுவாம். மேற்கண்ட பன்னிருவருள் ஒருவராய விஷ்ணுசித்தரென்றும் பட்டர்பிரான் என்றும் பெயர்வாய்ந்த பெரியாழ்வாரைப்பற்றி முதற்கட் கூறுவாம்.

மதுரைமாநகரின்கண் வல்லபதேவபாண்டியன் அரசுபுரிந்தொழுகுநாளில் அவ்விண்டுசித்தரென்னும் பெரியோர் அவண்போந்து ஆண்டு வைணவமதத்தை நிலைநிறுத்தி, அம்மன்னனையும் அம்மதத்தை மேற்கொண்டொழுகுமாறு செய்தனர். அக்காலத்தில் ஒரு சன்னியாசி மதுரையை யடைந்து ஓரந்தணன்வீட்டுத்தெற்றியிற் படுத்துறங்கிக்கொண்டிருந்தான். அரசன் நகரிசோதனையின்பொருட்டு மாறுவேடம்புனைந்து வழக்கம்போல் ஊரைச் சுற்றிவருகையில் தெற்றியிலிருந்த சன்னியாசியுடன் பேசத் தொடங்கினான். அப்பொழுது துறவி மன்னனைநோக்கி "ஐய! விண்ணுலகவின்பத்தை யடையுமாறு முயறலே தகுதி. அதுபற்றி உண்மைக்கடவுளை ஓர்ந்தறிந்து வழிபட்டு ஏனைய தேவதாந்தரங்களை விடுத்து நல்வழிச்சேறலே யமைவுடைத்து" என்று கூறிவிடுத்தான். அவ்வுபதேசமொழியின் உண்மையறிந்த மன்னன் மாளிகையடைந்து மறுநாட்காலை இதனைக்குறித்து மந்திரியை உசாவத்தலைப்பட்டனன். அமைச்சனும் மன்னனைநோக்கி "ஐய! பெரியதோர் தறிநட்டு அதன் நுனி

யிற் பொன்முடிப்பொன்றை யமைத்து, தத்தஞ்சமயத நிதுண்மையை யெடுத்து மொழிவார்தமக்குள் உண்மையெனத் தனது பதத்தை நிலைநிறுத்துவாற்கு அப் பொன்முடிப்புக் கொடுக்கப்படுமென்று யாண்டும் பறை யறைவித்தா லொருகா லுண்மைவெளிப்படும்" என்று மொழிந்தான். புத்தர்களும், சைனர்களும், சைவர்களும், இதாபதத்தினர்களும் ஒருங்கு சேர்ந்து வல்லப தேவ பாண்டியன் அவைக்கண் ணணுகினர். திருமால் வில்லிபுத்தூரில் வதிதரும் விண்டுசித்தருடைய கனவிற் றோன்றி அவரையும் பாண்டியனவைக்கேகுமா றேயினார். மேலும அந்நாட்டின்கண் வைணவ சமயத்தை நிலைநிறுத்தல் வேண்டுமென்றும், ஏனைய சமயவாதிகளை அவர் வென்று வெகுமதிபெறுவா ரென்றும் அவர்க்குத் திருமாலே அருளிச்செய்தார். திருமாலின் ஆணையைச் சிரமேற்கொண்டு சித்தரும் சிவிகையேறி தமது பரிவாரத்துடன் மதுரைக்கு வழிக்கொண்டனர்.

மன்னனும் அடியார்களாற் றூங்கப்பட்ட சிவிகையிலிவர்ந்து விண்டுசித்தர் வருவதை யுணர்ந்து தானும் தனது அமைச்சருடன் அவரை யெதிர்கொளக்கருதிச் சென்று வணங்கி ஆதித்தியம்புரிந்து தனது அரண்மனையிலேயே அவரை இரீஇயினன். பிறகு நடந்த சமயவாததத்திற் சித்தரே வென்றனர்; விண்டுவே பரம்பொருளென நிலைநிறுத்தினர். வென்றவர்கொள்ளுமாறு வைத்திருந்த பொன்முடியும் தம்பத்தின் முடியிலிருந்து சித்தர்தம் அடியில் விழுந்தது. ஆண்டுக் குழீஇயிருந்தார் கண்ணும் மனமும் மலர்ந்தன. விண்டுசித்தர்தம் பெருமை யென்னென யாவரும் வியந்தார்.

மேற்கூறிய வல்லபதேவன் என்னும் பாண்டியன் யாவன்? யாண்டுந் தன் புகழ் பரப்பிய அதிவீரராம பாண்டியனே அவ்வல்லபதேவ பாண்டியன் என்று வற்புறுத்துஞ் சாசன மொன்றைத் தான் கண்டுபிடித்ததாக

வும், வல்லபதேவனால் நன்கொடை யளித்தமைக்குச் சான்றாக அநேகம் சாசனங்கள் தமக்குக்கிடைத்தவென்றும், ஆயினும் பின்னர்க்கூறிய சாசனங்களிற் காலங் குறிக்கப்படவில்லை யென்றும டாக்டர் கால்டுவெல் துரையவர்கள் சொல்லுகின்றார்; எனினும், அதிவீரராம பாண்டியனே வல்லபதேவபாண்டியனென்று வலியுறுத்துஞ் சாசனத்திற் காலங் குறிக்கப்பட்டிருக்கின்றது. அச்சாசனம் பாண்டியனது அரசாட்சியின் நாற்பதாவது ஆண்டாகிய சகம் 527-இற் பொறிக்கப்பட்டது. அஃதாவது-கி. பி. 1605-ஆம ஆண்டாம். எனவே, வல்லபதேவன் பட்டமடைந்த ஆண்டு கி. பி. 1565-ஆகும், (* கால்டுவெல்துரை யெழுதிய திராவிட பாஷைகளின் ஒப்புநோக்கிலக்கணம் 145-ஆம் பக்கம பார்க்க.)

வைணவசமயநூல்களி னுரையாசிரியரு ளொருவராகிய பிள்ளைலோகஞ்சீயர் என்பவர் வீண்டுசித்தரைப் புகழ்ந்துரைக்கும் பாவினு ளொன்றாகிய

“ பாண்டியன் கொண்டாடப் பட்டாபிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று ”

என்னும் வெண்பாவினுக் குரையெழுதப் புகுங்கால்,

“ பாண்டியன் கொண்டாட—‘தென்னன்கொண்டாட’ என்னுமாபோல் நடக்குப்பரதத்துவநிர்ணயம் பண்ணித் தரும்படி பட்டர்பிரான் வந்தானென்று பாண்டியனை ஸ்ரீ வல்லபதேவன் சொல்லிக்கொண்டாட” என்று உரையெழுதிப்போந்தார்.

மேற்குறித்த உரையாசிரியராகிய பிள்ளைலோகஞ்சீயர் என்பவர் அஷ்டதிக்கஜங்கள் (எட்டுத்திசையானைகள்) என்று சிறப்புப்பெயர்வாய்ந்த மணவாளமாமுனிவர்தஞ்

சீடர்கள் எண்மரிலொருவராகியபராவஸ்துபட்டர்பிரான்சீயருடைய மாணாக்கரென்று கூறப்படுவதனானே சற்றேறக்குறைய கி. பி. 14-ஆம் நூற்றாண்டினிறுதியிலிருந்தாரென்பது புலப்படும்.

முன்னரியாஞ்சுருக்கமாய்க்கூறிப்போந்த விண்டுசித்தரது சரிதையையே விடயமாகக்கொண்டு, கி. பி. 1509 முதல் கி. பி. 1530 வரையிலரசாண்ட கிருஷ்ணதேவராயன் அவைக்களத்து வீற்றிருந்த அலசாணிப்பெத்தண்ணனென்னுங் கவி ஆந்திரபாடையிலொருநூலியற்றியிருக்கின்றான். ஆதலான் இக்கவி நூலியற்றிய காலம் சற்றேறக்குறைய கி. பி. 1520-ஆம் ஆண்டெனக்கொள்ளலாம்; எனவே விஷ்ணுசித்தீயமு என்ற அக்காவியத்தின்நாயகனாகிய விண்டுசித்தர் வசித்த காலம் சற்றேறக்குறைய கி. பி. 1509-ஆம் ஆண்டெனத் துணியலாம்.

அற்றேல் பல்லோர் குழீஇய அவைக்களத்தே வைணவ மதத்தை மெய்ச்சமய மென்று நிலைநிறுத்திய விண்டுசித்தரது காலத்தரசாண்ட வல்லபதேவபாண்டியனும், கி. பி. 1605-ஆம் ஆண்டிலரசாட்சிபுரிந்த அதிவீரராமபாண்டியனென்னுஞ் சிறப்புப்பெயர் வாய்ந்த வல்லபதேவபாண்டியனு மொருவனே யென்றெண்ணலாகாது. அவர் தங்காலமென்னென்றாய்வுழி, கி. பி. 1113-ஆம் ஆண்டில் மகிஷாசுரபுரத்தில் (Mysore) அரசாண்ட விஷ்ணுவர்த்தன னென்னும் மன்னன்காலத்திருந்தனர், இராமாநுஜாசாரியர் என்பவர்; இவரானே யேற்படுத்தப்பட்ட சமயம் இவரது சீடர்களாய எழுபத்துநான்கு சிங்காதனாதிபதிகளுடைய காலத்திலாவது அன்றி அவர்க்குப் பிற்காலத்திலாவது பரவுதலுற்றிருத்தல்வேண்டும். வைணவசமயத்தை யுண்டாக்கியவர் இராமநுஜர்என்று கொள்ளப்படுவதனானே, விண்டுசித்தர் அவர்களுக்கும் முன்னிருந்தாரென்று நம்புறுதற்கிடனின்று. மேலும் மதுராபுரியை யடிகோலி நிருமித்த

குலசேகரபாண்டியனாதியாகக் கூன்பாண்டியனும் அவன் புதல்வனும் இறுதியாக மதுரையிலரசாண்ட மன்னவருடைய காலத்தி லெவ்வமயத்திலேனும் மதுரையில் வைணவமதம் நிலைபெறநாட்டப்பட்டது என்று எவ்வாற்றானும் அறியகில்லையாதலி னங்ஙனங்கோடலமையாது.

ஆலாசியமான்மியம் முதலிய தலபுராணங்கள் யாவும் மதுரையிற் கோயில்கொண்டெழுந்தருளிய சிவபெருமானதுயர்வு தோன்றக் கூறப்பட்டனவா மாதலின், அவைகளுள் வைணவமதத்தி னுயர்வைக் குறிக்கும் விடயம் ஒன்றேனு மொருதலையாகக் கூறப்படமாட்டாது; எனவே, அதனை அப்புராணங்களுளிருக்குமாறு எதிர்பார்த்தல் தவறு என்ற வாதமு முண்டாகலாம். அதற்கு யாமுமுடன்படுகின்றோம்; எனினும் மதுரையி லெவ்வமயத்திலேனும் வைணவமதம் தாபிக்கப்பட்டிருந்த துண்மையாமாயின், அஃது ஆதியிலிருந்த சமயப் புலவர்களாலாவது, முனிவர்களாலாவது, உரையாசிரியர்களாலாவது தமது நூலின்கட் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். கி. மு. 3-ஆம் நூற்றாண்டுமுதல் ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டளவும் பௌத்தமதமும் சமண சமயமும் அத்தேயத்திற் பரவியிருந்தனவென்றும், அக்காலத்தின்பின்னரே அச்சமயங்கள் க்ஷீணதசை யடைந்தனவென்றும் பன்னூல்களையும் நன்காய்ந்த புலவர்களானே கொள்ளப்படுகின்றன. கி. பி. எட்டாவது நூற்றாண்டிற்கு முன்னமே வைணவமதம் உண்டாயதென்பது கொள்ளற்பாலதன்று. இவ்வல்லபதேவபாண்டியர் இன்னாரென்றும், அவனுடைய காலம் இன்னதென்றும் ஆய்ந்தறிந்து அளவிட்டுரைத்த லரிதெனினும் விண்டுசித்தர் கி. மு. 3056 என்னும் அவ்வளவு முற்பட்ட காலத்திற் றோன்றவில்லையென்று யா மொருதலையாய்த் துணிந்துகோடலாம். இன்னணங் கூறிய வுறுதிமொழி ஏனைய வைணவாசிரியருட் சிலர்தங் காலத்தைப்

பின்னராய்வதனாற் பெறப்படுங் காரணங்களினானே நன்குறுதிப்படல் காண்க.

தனது பராக்கிரமத்தானே யாண்டுந் தன்புகழ்நிறீஇயவனும் ஏனையமன்னர்களைத் தன்னடிப்படுத்தி ஆண்டவனுமாய கோச்செங்கணானென்னுஞ் சோழனைப்பற்றித் தமது பிரபந்தத்திற் சிறப்பித்துக் குறிக்குந் திருமங்கையாழ்வாரது காலத்தைப்பற்றி இனி ஆராயத் தொடங்குவாம். கோச்செங்கணான் சேரநாட்டின்மேற் படையெடுத்துச்சென்று சேரமன்னன் கணைக்காலிரும்பொறையினைக் கழுமலமென்னுமிடத்து வென்கண்டு அவனைச் சிறைகொண்டனன். அப்போரினைபபற்றிப் பொய்கையாரியற்றிய நாற்பதுபாக்களானியன்ற களவழிநாற்பது என்னுஞ் சிறுநூலின்கண் பரக்கக்காணலாம். இந்நூலின் கடையிற் பின்வருமாறு இறுதிக்கூற்றொன்று சேர்க்கப்பட்டுளது.

"சோழன் செங்கணானும் சேரமான் கணைக்காலிரும்பொறையும் போர்பபுறத்துப் பொருதுழிச சேரமான் கணைக்காலிரும்பொறையைப் பற்றிக்கொண்டு சோழன் செங்கணான் சிறைவைத்துழிப் பொய்கையார் களம்பாடி வீடுகொண்ட களவழிநாற்பது முற்றிற்று."

யாம் முன்னரே கூறிய புறப்பாட்டு என்னுஞ் செய்யுட்டிரட்டின்கண் ஒரு பாவில் இத்தகையபோரைப்பற்றிக் குறிக்கப்பட்டுளது. ஈண்டுக்கூறியிருக்கும் இறுதிக்கூற்றினானே, செங்கண்ணான் என்னுஞ் சோழனுக்கும் கணைக்காலிரும்பொறை யென்னுஞ் சேரனுக்கும் போர்நிகழ்ந்ததென்பதும், பின்னவன் பற்றுண்டு குடவாயிற்கோட்டத்துச் சிறைவைக்கப்பட்டன னென்பதும் தெரியவருகின்றன.

"சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன்செங்கணானோடு போர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டு

க்குடவாயிற் கோட்டத்துச் சிறையிற்கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண் டிருந்து உண்ணான் சொல்லித்துஞ்சிய பாட்டு" என்னு மிறுதிக்கூற்றினை யறிக.

இக்களவழிநாற்பதிற்கு ஆங்கில மொழிபெயர்ப்பி னோடு அந்நூற்பொருளடக்கத்தைப்பற்றிய சில குறிப் புக்களு மடங்கிய இனியவரலாறொன்று ஸ்ரீ கனகசபை பிள்ளையவர்கள், பி. ஏ., எழுதியிருக்கின்றனர். அதனை இந்தியபுராதனகலைஞன் பதினெட்டாஞ் சம்புடத்தில் 258 முதல் 260 வரையுமுள்ள பக்கங்களிற் காண்க.

பெரியதிருமொழியின்கண் கோச்செங்கண்ணனைப்பற்றி மிகவு முயர்வாகச் சொல்லப்பட்டுளது. அவனைக்குறிக் கும் * அப்பகுதிகளினின்றும் அவன் திருநறையூரின்க ணெழுந்தருளியிருக்குந் திருமாலை வணங்கும் வழக்க முடையானென்பதும், பாண்டியசேரநாடுகளை வென்றன னென்பதும், எழுபது கோயில்கள் கட்டினனென்பதும், பலவரசர்களோடும் போர்புரிந்து பெருஞ்சேனை கொ ண்டு அவர்தமை யழித்தனனென்பதும் அறிகின்றோம். ஆயினும், அவனைச் சைவர்கள் ஒரு முனிவராகக் கருது வதனோடு பெரியபுராணத்திற் சிறப்பித்துக் கூறப்படும் நாயன்மார் அறுபத்துமூவரு ளொருவராக அடக்கிக்கொ ண்டாடுகின்றார்கள். இந்நூலின்படி இவன் சுபதேவ சோழற்குக் கமலாவதி யென்பாளிடம் பிறந்தவனாகின்

* "பைங்கணா ளரியுருவாய் வெருவ நோக்கிப் பருவரைத்தோ ளிரணியனைப் பற்றி வாங்கி, யங்கைவா ளுகிர்நுதியா லவனதாகம் மங்குருதி பொங்குவித்தா னடிக்கீழ் நிற்பீர், வெங்கண்மா களிறுந்தி விண்ணிவெற்ற விறன்மன்னர் திறலழிய வெம்மாவுய்த்த, செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயிற் திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே."

"முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை கேள்வன் மன்னெல்லா முன்னவியச் சென்று வென்றிச், செருக்களத்துத் திறலழியச் செற்ற வேந்தன் சிரந்துணித்தான் திருவடிநுஞ் சென்னி வைப்பீர், இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற் கெழின்மாட மெழுபதுசெய் துலக மாண்ட, திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயிற் திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே."

றான். தாயாகிய கமலாவதி மகப்பெறும் பொழுதத்து அரசன் சில சோதிடம்வல்லுநரைக் கூய் அது நல்லோரையேயோ வென்று வினவியவழி, அவர்கள் அற்றன்றென மறைவிடை கொடுத்ததுமேயன்றி அதற்கோர் நாழிகைப்பொழுது கழிந்து மகப்பிறக்குமேல் அம்மகவு சக்கரவர்த்தியாமென்றுங் கூறினர். இங்ஙனஞ் சோதிடர் சொற்றவாறென்பது செவிக்கொண்ட கமலாவதி, குறித்த நல்லோரை வருமளவுந் தன்னைத் தலைகீழாய்க்கட்டி காலவிடுமாறு செய்துகொண்டு 'செங்கண்ணான்' என்னும் பெயரிய வோராண்மகனைப் பெற்றெடுத்தாள். தாதையாகிய சுபதேவசோழனும் அவ்வாண்மகனிற்குரிய சடங்குகள் யாவற்றையுஞ் செவ்வனே செய்து முடித்துப் புதல்வன் தக்க பிராயமுற்றவழி அவனைத் தனதுநாட்டினுக்கிறையாக நிறுவித் தான் வனம்புகுந்து எஞ்சிய காலத்தினைத் தவஞ்செயலிற் கழிப்பானாயினன்.

செங்கண்ணான் வாழ்க்கையைப் பற்றிய இவ்விரு கூற்றுக்களும் ஒன்றோடொன்று முரணுவதாயில்லை. ஐவர்கள் கூறியவண்ணம் அவன் ஞானமயநெறி மேற்கொண்ட முனிவனுமலன். இயல்பிடையும் அவன் திருமாலையும் ஒருங்கு வணங்குதலொழிய மாறுபடவில்லை. ஆதலின், யாம் அவ்விருவகைக்கூற்றும் ஒரே செங்கண்ணானைக் குறிக்குமெனக் கோடலியலும். அன்றியும், இப்பெயர் நமக்குத் தற்காலங் கிடைக்கக்கூடிய சோழர்வமிசாவளிகளிற் பன்முறையுங் கூறப்படவில்லை. தென்னிந்திய சிலாசாதன வாராய்ச்சிப் பத்திரிகையின் நான்காஞ் சமுட்டத்தின்கட் காணப்படும் யாவரும் மிகுதியும் நம்பிக்கை வைக்கத்தகுந்த ஒரு சோழவமிசாவளியில் ஒரேயொரு செங்கண்ணான் கூறப்படுகின்றனன்; அவன் பெயா கரிகாற்சோழன் முதலாயவருக்குப் பின்னும் கி. பி. 890-ஆம் யாண்டு பட்டமெய்திய விசயாலயற்கு முன்னுங் கூறப்பட்டுளது. யாம் முன்னரே காட்டியாங்குக்

கரிகாற்சோழன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற் செழித்தோங்கினனாகவே கோச்செங்கண்ணன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இடையிலிருந்திருக்க வேண்டும். எனவே, கோச்செங்கண்ணன் காலத்தை ஒருவாறு எறக்குறையக் கி. பி. எழாவது அல்லது எட்டாவது நூற்றாண்டெனக் கொள்வோமாயின், திருமங்கையாழ்வார் அவனது காலத்திற்குப் பின்னிருந்திருக்கவேண்டும்; ஆகவே, அவர் கி. மு 2705-ஆம் ஆண்டிற் பிறந்திருக்கவே முடியாது.

திருமங்கையாழ்வாரது சீவிதசரித்திரசம்பந்தமாக அதனைப்போதரும் அநுமானத்தோடும் எடுத்துரைக்கற்பாலவிஷயமொன்றுண்டு. பின்பழகியமணவாளசீயர் என்னும் வைணவமுனிவரொருவர் செய்ததாகக் கூறப்படும் குருபரம்பரை யென்னும் நூலினிடத்து, திருமங்கையாழ்வார் சைவமுனிவர்கட்குள் மிகுந்த ஆற்றல்படைத்தவரும் அறுபத்துமூன்று நாயன்மார்களுட் டலைவரெனக் கருதப்படுபவருமாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரோடும் சமயவாதஞ்செய்தன ரென்பதும், அவ்வாதத்தின்கட் பின் அவரைத் தோற்கடித்து அவரிடத்தினின்றும் தாம் அவரை வென்றதற் கறிகுறியாக அவர் கொண்டிருந்த முத்தலைச்சூலத்தைப் பறித்துக்கொண்டனரென்பதும் கூறப்பட்டுள. இவை உண்மையென்றேற்படுமேல் திருமங்கையாழ்வாருக்குக் கூறப்பட்ட அத்துணைப் பழமையும் குறைந்தொழியு மென்க. எவ்வாறென்னின் சைவசமய குரவராகிய திருஞானசம்பந்தர் அவ்வளவு பழமையானகாலத்து வாழ்ந்திருந்தனரென்று யாண்டுங் கூறப்படவில்லை.

சைனமதம் குறைவுறுங்காலத்தில் அவர் வாழ்ந்திருத்தல் வேண்டும். அவர் பலசைனக்குருக்களையும் வாதப்போரில்வென்று அரசன் ஆணைபெற்று அவர்தம்முட் பெரும்பாலோரைக் கழுவேற்றினரென்று கூறுப. ஆயினும்

சரித்திர சம்பந்தமாக ஆராயுமிடத்து இத்தகைப் பெருங் கொலை நிகழ்ந்திருக்கமாட்டாதென்றும், இக்கூற்றினால் ஞானசம்பந்தர் மூலமாய்ச் சைனசமயம் இறுதியுற்ற தென்றும், அவர் அரசன் கூன்பாண்டியனைச் சைவசமயத்திற்குத் திருப்பி மதுரையி லரசனு லாதரிக்கப்பட்டிருந்த சைனகுரவரிற் சில்லோரைத் துரத்திவிட்டன ரென்றுந் துணிதற் கிடனுண்டு. இச்செய்திகள் யாவும் ஞானசம்பந்தர்காலம் ஏறக்குறையக் கி. பி. ஏழாவது நூற்றாண்டென்னுங் கூற்றை வலியுறுத்துகின்றன. ஆனால் அத்துவிதமதஸ்தாபகராகிய ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் செய்ததாகக் கூறப்படும் சௌந்தரியலகரி என்னும் ஸம்ஸ்கிருத நூலின்கண் இவர் 'திராவிடசிசு' * என்று குறிப்பிக்கப்பட்டுளரென்று பலரும் கூறுப. ஆனால் லக்ஷ்மீதர பண்டிதர் என்னு மொருவ ரியற்றிய அதன் வியாக்கியானத்தில் 'திராவிடசிசு :' என்பதற்கு 'த்ராவிடஜாதி ஸமுத்பவோபால : ஏதஸ்தோத்ரஸ்ய கர்த்தா' என்று கூறப்பட்டுளது ; அதன்பொருள் : திராவிடசாதியிற்பிறந்த குழந்தையும் இந்தத்துதிரூபமாயுள்ள நூறு பாடல்களை ஆக்கியோருமாயவர் ; எனவே சங்கராசாரிய சுவாமிகளே என்பதாம். ஆனால் அந்த ஸம்ஸ்கிருத நூலைத் தமிழ்மொழியின்கட் செய்யுளாக மொழிபெயர்த்த வீரகவிராயரென்பார் 'திராவிடசிசு' என்னும் அச்சொ

* तवस्तन्ये मन्ये धरणिधरकन्ये हृदयतः
पयः पारावारं परिवहति सारस्वतमिव ।
दयावत्या दत्तं द्रविडशिशुरास्वाद्य तव यत्
कवीनां प्रौढानामजनि कमनीयः कवयिता ॥
द्रविडजातिसमुद्भवो बालः एतत्स्तोत्रस्य कर्ता ॥
इति लोल्ललक्ष्मीधरपण्डितः ।

ற்றெருடைரை "வருணாநன்குறு கவுணியன் சிறுமதலே"* என்று மொழிபெயர்த்துளர்; அதன்பொருள்: பிராமண சாதியாகிய உத்தமகுலத்திற் கெளண்டிணிய கோத்திரத்திற் பிறந்த சிறுகுழந்தை என்பதாம். இசசொற்கள் சிறிதேனு மையமின்றி ஞானசம்பந்தரையே குறிக்கும்.

இவ்வாறு வியாக்கியானங்கள் மாறுபடுதலின் அவை தம்முள் இதுதானுண்மையென்று ஒருதலே துணிந்துகூறுதற் கியலவில்லே. ஆனுற் பின்னர்க்கூறிய உரைப்பொருளுக்கு ஆதாரமாகச் சங்காரசாரிய சுவாமிகள் தமது சிவபுஜங்கஸ்தோத்ரத்தின்கண் இயற்பகை நாயனுரையும் சிறுத்தொண்டநாயனுரையும சண்டேச நாயனுரையும், தமது சிவாநந்தலஹரியின்கட் கண்ணப்ப நாயனுரையும் பற்றிக் குறிப்பித்திருத்தலால் ஈண்டுக்கூறிய இந்நான்கு நாயன்மாரையும் போலவே அறுபத்துமூவருளொருவரென்றடக்கப்படும அந்த ஞானசமபந்தரையும இவர் துதித்திருத்தலியலாதோ என்று கூறுவாருமுளர். நாம் செளந்தரியலஹரியும் இன்னும் மற்றைய சிறுநூல்களும் சங்காரசாரியசுவாமிகள் செய்தனவே யென்று உறுதியாய்க் கூறுங்காறும் இவ்வாதம் ஒருதலே துணிந்துரைத்தற் கியலாதாம்பிற வெண விடுக்க. இன்னும் சங்காராசாரிய சுவாமிகள் தமது செளந்தரியலஹரியின்கண் ஞானசம்பந்தரையே குறித்தாரெனக் கொண்ட போதினும் நாம் சங்கராசாரிய சுவாமிகளுக்குத் திருஞானசம்பந்த சுவாமிகள் முன்னரிருந்தனரென்றுதல் இருவருமேக காலத்திலிருந்து சமபந்தசுவாமிகள் மற்றையோரினும மூத்தவராயிருந்தன ரென்றுதல் கூறலாமேயன்றி வேறென்றும் முடியாது. சங்கராசாரியாது காலம் கி. பி.

* தருணமங்கலை யுனதுகிங்கிதை தழைந்தபாலமு தூறினை
லருணகொங்கையி லதுபெருந்நதி யலைகெழுங்கடலாகுமே
வருணனன்குறு கவுணியன்சிறு மதலையம்புயல பருகியே
பொருணயம்பெறு கவிதைபொனொருரு புனிதனாரி பொழிந்ததே.

எட்டாவது நூற்றாண்டின் பிற்பகுதியென்று தீர்மானிக்கப்பட்டுளதாதலின், திருஞானசம்பந்தரும் அதேகாலத்திலாதல் அதற்குச் சற்றுமுன்னராத லிருந்திருக்கவேண்டும். பிற்கூறியதே மிகவும் நம்புதற்பாற்று; ஆயின் இவ்வனுமானத்தினால் ஞானசம்பந்தருக்கும் திருமங்கையாழ்வாருக்கும் சமயவாதம் நிகழ்ந்து அதன்கண் ஞானசம்பந்தர் தோற்றுத் தமது முத்துலேச் சூலத்தைப் பறிகொடுத்தனரென்பது மெய்யென நாம் ஒப்புக்கொள்வோமாயின் சங்கராசாரியர்காலத்திற்கு முன் திருமங்கையாழ்வாரிருந்தனரென்பதுமாத்திரை ஏற்படுமென்றறிக.

மேற்கூறியதினும் அதிக முக்கியமானதும் திருமங்கையாழ்வார் காலத்தினை யொருவாறாகவேனும் வரையறைப்படுத்த வல்லதுமாகிய இன்னொரு விடய முளது. திருமங்கையாழ்வார் தமது பிரபந்தத்தின்கண் சிலவிடங்களில் தொண்டையர்கோனைப்பற்றிக் கூறுகின்றனர். பெரிய திருமொழி இரண்டாம் பத்தின்கண் முப்பதாம் பாடலில் திருவல்லிக்கேணியிலெழுந்தருளிய திருமாலை "தொண்டையர் கோன் செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணி நின்றான்" என்கின்றனர். இதற்குத் தன்னரசர்கட்கு வாசஸ்தானமாகிய மயிலாப்பூரைத் தன்னருகே கொண்ட திருவல்லிக்கேணியி லெழுந்தருளித் தொண்டைராசனாற் செய்யப்பட்ட விக்கிரகத்தின்கண் இருப்போன் எனப் பொருள் கூறப்படும். இப்பொருள் பெரிய வாச்சான்பிள்ளை வகுத்த வியாக்கியானத்தை ஒட்டிக் கூறப்பட்டது.

பெரிய திருமொழி இரண்டாம் பத்தின்கண் எண்பதாம் பாடலில் திருமால் காஞ்சிமாநகரி லெழுந்தருளி வயிரமேக னென்னும் தொண்டைமானால் வணங்கப்பட்டன ரென்று கூறப்பட்டுளது.

இவனு மிவற்கு முற்கூறப்பட்ட வாசனும் கி. பி. 1064-ஆம் ஆண்டுமுதல் 1113-ஆம் ஆண்டுவரை அர

சாண்ட குலோத்துங்க சோழனது மகனாகிய முதல் தொண்டைமானது வமிசத்தினராகவேனும் அல்லது அவர்களு ளொருவர் அம் முதல்தொண்டைமானே யாக வேனு மிருக்கலாம். முதற்கட் கூறப்படுவோன் திருவல் லிக்கேணியில் திருமால் விக்கிரகத்தை விதிப்படி தாபித் தவனாகவும், பின்னர்க்கூறப்படுவோன் அக்கடவுளை வண ங்கும் ஒரு தொண்டை ராசனாகவுங் கூறப்படுகின்றனர்; 'வணங்கும்' என்ற நிகழ்காலப் பெயரெச்சப் பிரயோக மும், மூலப்பாசுரத்தி லுபயோகப்படுத்தப்பட்ட "மன் னவன் தொண்டையர்கோன் வணங்கும் நீண்முடி மாலை வயிரமேகன் தன் வலிதன் புகழ் சூழ்ந்த கச்சி" என்ற நீண்ட அடைமொழியும், திருமங்கையாழ்வார் தங் காலத்திருந்து விஷ்ணுபக்த னாகிக் கச்சியம்பதியைத் தன் வலியினாலும் புகழினாலும் போற்றிய தொண்டை ராசனொருவனைக் குறிப்பிக்கின்றனவென்று நாம் துணி தற் கிடந்தருகின்றன. அவ்வரசன் அவ்வாழ்வாரது கா லத்தினனென் றேற்பட்டானாற் றான் இறுதியிற் கூறியன அவ்வரசற்குப் பொருந்தும்.

# அநுபந்தம்.

## ஆலாசிய மான்மியத்தின்படி பாண்டியராஜ வமிசாவளி.

1. குலசேகரபாண்டியன் - அவன்மகன்
2. மலயத்துவசபாண்டியன் - அவன் மனைவி காஞ்சன மாலை - அவர் தம்மகள்
3. தடாதகை - அவள் கணவன் சுந்தரபாண்டியன் - அவர் தம் மகன்
4. உக்கிரபாண்டியன் (உக்கிரப்பெருவழுதி?) ஹாரதாரி யென்னும் பெயர்வாய்ந்தவன் - அவன் மனைவி காந்திமதி - இவனொரு சங்கங்கூட்டினான் - அவன் மகன்
5. வீரபாண்டியன் - அவன்மகன்
6. அபிடேகபாண்டியன் - அவன்மகன்
7. விக்கிரமபாண்டியன் - அவன்மகன்
8. இராசசேகரபாண்டியன் - கரிகாற்சோழனு மிவன் காலத்தினனே ; இராசசேகரன்மகன்
9. குலோத்துங்கபாண்டியன்
10. அனந்தகுணபாண்டியன் - அவன்மகன்
11. குலபூடணபாண்டியன் - இவன் சுந்தரசாமந்தனென வுங் குலசேகரனெனவுங் கூறப்படுவோன் - காடு வெட்டிய (காந்தாரச்சேதி) சோழன் இவன் காலத் தினனே - குலபூடணன்மகன்
12. இராசேந்திரபாண்டியன் - அவன் சகோதரன் இராச சிங்கன், காடுவெட்டிய சோழனதுமகளை மணந்து தன் சகோதரனொடு மாறுபட்டுக் கலகஞ்செய்தான் - இராசேந்திரன்மகன்
13. இராசேசபாண்டியன் - அவன்மகன்
14. இராசகம்பீரபாண்டியன் - அவன்மகன்
15. பாண்டியவமிசப்பிரதீபபாண்டியன் - அவன்மகன்
16. புருகூதவிசித்துப்பாண்டியன் - அவன்மகன்

17. பாண்டியவமிசபதாசபாண்டியன் - அவன்மகன்
18. சுந்தரேசபாத சேகரபாண்டியன் - சோழன் பாண்டி நாட்டின் மீது படையெடுத்துப்போந்து தொலை வுண்டான். சுந்தரேசபாதசேகரன் மகன்
19. வரகுணபாண்டியன் - பாணபத்திரன் (பத்ரகாயகன்) இவன்காலத் திருந்தான். வரகுணன் மகன்
20. இராசராசபாண்டியன் - அவன்மகன்
21. சுகுணபாண்டியன் - அவன்மகன்
22. சித்திரரதபாண்டியன் - அவன்மகன்
23. சித்திரபூடணபாண்டியன் - அவன்மகன்
24. சித்திரத்துவசபாண்டியன் - அவன்மகன்
25. சித்திரவருமபாண்டியன் - அவன்மகன்
26. சித்திரசேனபாண்டியன் - அவன்மகன்
27. சித்திரவிக்கிரமபாண்டியன் - அவன்மகன்
28. இராசமார்த்தாண்டபாண்டியன் - அவன்மகன்
29. இராசசூடாமணிபாண்டியன் - அவன்ம ன்
30. இராசசார்த்தூலபாண்டியன் - அவன்மகன்
31. துவிசராசகுலோத்தமபாண்டியன் - அவன்மகன்
32. ஆயோதனப்பிரவீணபாண்டியன் - அவன்மகன்
33. இராசகுஞ்சரபாண்டியன் - அவன்மகன்
34. பரராசபயங்கரபாண்டியன் - அவன்மகன்
35. உக்கிரசேனபாண்டியன் - அவன்மகன்
36. மகாசேனபாண்டியன் - அவன்மகன்
37. சத்துருஞ்சயபாண்டியன் - அவன்மகன்
38. பீமரதபாண்டியன் - அவன்மகன்
39. பீமபராக்கிரமபாண்டியன் - அவன்மகன்
40. பிரதாபமார்த்தாண்டபாண்டியன் - அவன்மகன்
41. விக்கிரமகஞ்சுகபாண்டியன் - அவன்மகன்
42. யுத்தகோலாகலபாண்டியன் - அவன்மகன்
43. அதுலவிக்கிரமபாண்டியன் - அவன்மகன்
44. அதுலகீர்த்திபாண்டியன் - அவன்மகன்
45. கீர்த்திபூடணபாண்டியன் - பிரளயத்தினுலுலகவழி வும் அதன்மறுபடைப்பு முண்டாயின.
46. வமிசசேகரபாண்டியன் - மிலேச்சர்களையுந் துருக்கர் களையுந் தொலைத்தான்; மூன்றுஞ்சங்கப்புலவர்க ளாகச் சரஸ்வதியின் அவதாரம் :—கபிலர், பரணர்

முதலாயினோர். விக்கிரமசோழன் இவன் காலத்தி னனே. வமிசசேகரன்மகன்

47. வமிசசூடாமணிபாண்டியன் - சண்பகமாற (சம்பக பாண்டிய) னென்னும் பெயர்வாய்ந்தவன். நக்கீரர் இவன்காலத்திற் செழித்தோங்கினர்.

48. பிரதாபசூரியபாண்டியன் - அவன்மகன்

49. வமிசத்துவசபாண்டியன - அவன்மகன்

50. இரிபுமர்த்தனபாண்டியன்

51. சோழவமிசாந்தகபாண்டியன்

52. சேரவமிசாந்தகபாண்டியன்

53. பாண்டியவமிசேச பாண்டியன்

54. வமிச சிரோமணி பாண்டியன்

55. பாண்டியேசுவர பாண்டியன்

56. குலத்துவச பாண்டியன்

57. வமிச விபூடண பாண்டியன்

58. சோம சூடாமணி பாண்டியன்

59. பூபசூடாமணிபாண்டியன். இவன்காலத்தி லொரு பிரளய முண்டாயிற்று. நக்கீரன முதலாயினோர் அத ன்கணடித்துக்கொண்டு போகப்பெற்று மீட்டு முயி ர்த்தெழுந்தனர்.

60. பாண்டியகுலேசபாண்டியன் - குலசேகரபாண்டிய னென்றும் பெயர்கூறப்படுவான். இடைக்காடர் (மத்தியவனநீசர்) இவன்காலத்திற் செழித்தோங் கினர். குலசேகரன் மகன்

61. அரிமர்த்தனபாண்டியன் - வாதவூரடிகள் (மாணிக்க வாசகர்) இவன்காலத்திற் செழித்தோங்கினர். அரி மர்த்தனன் மகன்

62. சகந்நாதபாண்டியன் - அவன்மகன்

63. வீரபாகுபாண்டியன்

64. விக்கிரமபாகுபாண்டியன்

65. பராக்கிரமபாகுபாண்டியன்

66. சுரபிபாண்டியன்

67. குங்குமபாண்டியன்

68. கற்பூரபாண்டியன்

69. காருண்ணியபாண்டியன்

70. புருடோத்தமபாண்டியன்

71. சத்துருசாசனபாண்டியன்
72. குப்ஜபாண்டியன். கூன்பாண்டியன் (சுந்தரபாண்டியன்) என்றுங் கூறப்படுவான். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் குலச்சிறை நாயனாரும் (குலயந்தனர்) இவன்காலத்திற் செழித்தோங்கினர்.
73. மதுரேசுவரபாண்டியன்

## சியூவெல் துரை காட்டும் பாண்டியராச மாபட்டவணை.

1. குலசேகரபாண்டியன்.
2. மலயத்துவசபாண்டியன்.
3. தடாதகை.
4. உக்கிரபாண்டியன்.
5. வீரபாண்டியன்.
6. அபிடேகபாண்டியன்.
7. விக்கிரமபாண்டியன்.
8. இராசசேகரபாண்டியன்.
9. குலோத்துங்கபாண்டியன்.
10. அநந்தகுணபாண்டியன்.
11. குலபூடணபாண்டியன்.
    இராசசிங்கன்.
12. இராசேந்திரபாண்டியன்.
13. இராசேசபாண்டியன்.
14. இராசகம்பீரபாண்டியன்.
15. பாண்டியவமிசப்பிரதீபபாண்டியன்.
16. புருகூதபாண்டியன்.
17. பாண்டியவமிசபதாகபாண்டியன்.
18. சுந்தரேசுரபாதசேகரபாண்டியன்.
19. வரகுணபாண்டியன்.
20. இராசராசபாண்டியன்.
21. சுகுணபாண்டியன்.
22. சித்திரரதபாண்டியன்.
23. சித்திரபூடணபாண்டியன்.
24. சித்திரத்துவசபாண்டியன்.
25. சித்திரவர்மபாண்டியன்.
26. சித்திரசேனபாண்டியன்.

27. சித்திரவிக்கிரமபாண்டியன்.
28. இராசமார்த்தாண்டபாண்டியன்.
29. இராசசூடாமணிபாண்டியன்.
30. இராசசார்த்தூலபாண்டியன்.
31. துவிசராசகுலோத்துங்கபாண்டியன்.
32. ஆயுதப்பிரவீணபாண்டியன்.
33. இராசகுஞ்சரபாண்டியன்.
34. பரராசபயங்கரபாண்டியன்.
35. உக்கிரசேனபாண்டியன்.
36. மகாசேனபாண்டியன்.
37. சத்துருஞ்சயபாண்டியன்.
38. பீமரதபாண்டியன்.
39. பீமபராக்கிரமபாண்டியன்.
40. பிரதாபமார்த்தாண்டபாண்டியன்.
41. விக்கிரமகஞ்சுகபாண்டியன்.
42. யுத்தகோலாகலபாண்டியன்.
43. அதுலவிக்கிரமபாண்டியன்.
44. அதுலகீர்த்திபாண்டியன்.
45. கீர்த்திவிபூஷணபாண்டியன்.
46. வமிசசேகரபாண்டியன்.
47. வமிசசூடாமணிபாண்டியன்.
48. பிரதாபசூரசேனபாண்டியன்.
49. வமிசத்துவசபாண்டியன்.
50. இரிபுமர்த்தனபாண்டியன்.
51. சோழவமிசாந்தகபாண்டியன்.
52. சேரவமிசாந்தகபாண்டியன்.
53. பாண்டியவமிசேசபாண்டியன்.
54. வமிசசூடாமணிபாண்டியன்.
55. பாண்டியேசுரபாண்டியன்.
56. குலத்துவசபாண்டியன்.
57. வமிசவிபூடணபாண்டியன்.
58. சோமசூடாமணிபாண்டியன்.
59. குலசூடாமணிபாண்டியன்.
60. இராசசூடாமணிபாண்டியன்.
61. பூபசூடாமணிபாண்டியன்.
62. குலேசபாண்டியன்.